# CURRENT AFFAIRS

## ஜூன் 2018

# CURRENT AFFAIRS

# ஜூன் - 2018


| வ.எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 1. | தமிழக நிகழ்வுகள் | 4 |
| 2. | தேசிய நிகழ்வுகள் | 12 |
| 3. | உலக நிகழ்வுகள் | 43 |
| 4. | முக்கிய தினங்கள் | 61 |
| 5. | விருதுகள் | 67 |
| 6. | நியமனங்கள் | 76 |
| 7. | அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் | 82 |
| 8. | விளையாட்டு நிகழ்வுகள் | 87 |
| 9. | வர்த்தக நிகழ்வுகள் | 98 |



WeShine Academy

# தமிழக நிகழ்வுகள்

- பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஜிஐஇசட் (GIZ) என்ற ஜெர்மன் நிறுவனம் 2 லட்சம் யூரோ மதிப்புடைய **'தி டிரான்ஸ்ப்ர்மேட்டிவ் அர்பன் மொபிலிட்டி இனிஷியேட்டிவ்' (Transformative Urban Mobility Initiative) என்ற விருதை** வழங்கியுள்ளது.
    - விருது வழங்கும் நிகழ்ச்சி ஜெர்மனியில் உள்ள லெய்ப்பிஸ் நகரில் அண்மையில் நடைபெற்றது.
    - சாலை வடிவமைப்பு திட்டத்துக்காக சென்னை மாநகராட்சிக்கு ஜெர்மனி நிறுவனம் சார்பில் விருது வழங்கப்பட்டுள்ளது.

1. நவீன வன **மரவிதை மையம் தமிழகத்தில்** எங்கு தொடங்கப்பட்டுள்ளது?

**விடை: M.R. பாளையம் (திருச்சி)**

**விளக்கம்:**

1. டெல்டா மாவட்டங்களுக்கு தரம் வாய்ந்த மற்றும் உயர்தர மரவிதைகள் வழங்கும் அவசியத்தை அமைக்கப்பட்டுள்ளது.

2. மாவட்டத்தின் **சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக சிறப்பாக செயலாற்றியதற்காக** எந்தெந்த மாவட்ட ஆட்சியர்களுக்கு விருது வழங்கப்பட்டுள்ளது?

**விடை : தஞ்சை, திருவள்ளுவர், விழுப்புரம்**

**விளக்கம்:**

1. ஜூன் 5 உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி 2017ம் ஆண்டிற்கான இவ்விருது சுற்றுச்சூழல் செயல்பாட்டில் சிறந்து விளங்கும் மாவட்டம், தனியார் நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு தமிழக முதல்வரால் வழங்கப்பட்டது.
2. இதன்படி தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் ஆ.அண்ணாதுரை, திருவள்ளுவர் மாவட்ட ஆட்சியர் எ.சுந்திரவல்லி, விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் இல.சுப்ரமணியன் ஆகியோர் இவ்விருதை பெற்றுக்கொண்டனர்.

3. **தமிழகத்தில் மக்காத பிளாஸ்டிக் பொருள்களுக்கு** எப்போது முதல் **தடை**விதிக்கப்படுவதாக தமிழக முதல்வா் அறிவித்துள்ளாா்?

**விடை: ஜனவரி 1, 2019**

**விளக்கம்:**

1. பிளாஸ்டிக் தாள்கள், பிளாஸ்டிக் தட்டுகள், பிளாஸ்டிக் கைப்பைகள், பிளாஸ்டிக் கொடிகள் போன்ற மக்காத பிளாஸ்டிக் பொருள்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.
2. எனினும் பால், தயிர், எண்ணெய், மருத்துவ பொருள்களுக்கான உறைகளுக்கு தடை இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

4. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள **காவிரி மேலாண்மை ஆணையத்தின் தலைவரின் பதிவிகாலம்** எத்தனை ஆண்டுகளாக நிா்ணயிக்கப்பட்டுள்ளது?

**விடை: 5 ஆண்டுகள் அல்லது 65 ஆண்டுகள்**

**விளக்கம்:**

1. நீா்வளத்துறை அமைச்சகத்தில் அனுபவமிக்க ஒருவா், மாநிலங்களுக்கிடையேயான நீா்பங்கீட்டு பிரச்சனைகளை மற்றும் நீா்பாசனத் திட்டங்களை கையாண்டு அனுபவம் பெற்ற ஒருவரே இவ்வாணையத்தின் தலைவராக நியமிக்க தகுதி பெறுவாா்.

2. இந்த தலைவரையும் மேலும் 2 முழுநேர உறுப்பினா், 2 பகுதி நேர உறுப்பினரையும் மத்திய அரசு நியமிக்கும்.

3. இவ்வாணையத்திற்கு தமிழ்நாடு, கா்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகியவை தலா ஒரு பகுதி நேர உறுப்பினரை நியமிக்கலாம்.

4. டெல்லியை தலைமையிடமாக கொண்ட இந்த அமைப்பு, ஒரு தலைவா் இரண்டு முழுநேர உறுப்பினா் மற்றும் 6 பகுதி நேர உறுப்பினரை கொண்டஅமைப்பாகும்.

5. காவிரி மேலாண்மை ஆணைத்திற்கு பகுதிநேர உறுப்பினராக தமிழக அரசின் சார்பில் பரிந்துரைக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை: எஸ்.கே.பிரபாகரன்**

**விளக்கம்:**

1. இதேபோல் காவிரி **ஒழுங்காற்றுக்குழுவின் உறுப்பினராக ஆர். செந்தில் குமார்** என்பவதை தமிழக அரசு பரிந்துரைந்துள்ளது.
2. காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க மத்திய அரசு அரசிதழில் கடந்த ஜூன் **1-ல் அறிவிப்பு** வெளியிட்டது.

6. அண்மையில் சென்னை உயர்நீதிமன்றத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட நீதிபதிகள் எத்தனை பேர்?

**விடை: 7**

**விளக்கம்:**

1. இவர்கள் முறையே பி.டி.ஆஸா, எம்.நிர்மல் குமார், சுப்ரமணிம் பிரசாத், என் ஆனந்த் வெங்கடேஷ், ஜி.கே.இளந்திரையன், கிருஷ்ணன் ராமசாமி மற்றும் சி. சரவணன் ஆவார்கள்.
2. இந்த 7 நீதிபதிகளும் இந்திய குடியரசுத் தலைவரான ராம்நாத் கோவிந்த் அவர்களால் நியமிக்கப்பட்டு, சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியான இந்திரா பானர்ஜி அவர்களால் பதவி பிரமாணம் செய்து வைக்கப்பட்டனர்.
3. 75 நிதிபதிகளை கொண்ட சென்னை உயர்நீதிமன்றத்திற்கு இவர்களையும் சேர்த்து தற்போது **63 நிதிபதிகள்** உள்ளன.

**4.** புதிதாக நியமிக்கப்பட்டோரில் பி.டி. ஆஸா என்ற பெண்ணையும் சேர்த்து மொத்தம் 12 பெண் நீதிபதிகள் உள்ளன. இதன் மூலம் **இந்தியாவின் அதிக பெண் நீதிபதிகளை கொண்ட உயர்நீதிமன்றமாக சென்னை உயர்நீதிமன்றம் உருவாகியுள்ளது.**

7. தமிழக அரசு விவசாயிகளுக்கு அண்மையில் அறிவித்துள்ள விருது எது?

**விடை: பாரத ரத்னா டாக்டர். எம்.ஜி.ஆர் பாரம்பரிய நெல் பாதுகாவலர் விருது**

**விளக்கம்:**

1. பாரம்பரிய நெல் ரகங்களை பாதுகாத்து சாகுபடி செய்து, மாநில அளவில் அதிக மகசூல் பெறும் முதல் மூன்று விவசாயிகளுக்கு இவ்விருது வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

8. NLC – இந்தியா பசுமை மின்சக்தி (சூரிய ஒளி, காற்றாலை போன்றவைமூலமாக மின்சாரம் தயாரித்தல்) அளவை எத்தனை மெகாவாட்டாக உயர்த்த திட்டமிட்டுள்ளது?

**விடை: 4251 மெகாவாட்**

**விளக்கம்:**

1. இதன் அடிப்படையில் **நெய்வேலியில் 140 மெகாவாட் திறன் கொண்ட சூரிய மின்சக்தி திட்டமும், திருநெல்வேலி மாவட்டம் கழுகுநீர் குளத்தில் 51 மெகாவாட் திறன்** கொண்ட காற்றாலை மூலம் மின் உற்பத்தி செய்யும் திட்டமும் நடைமுறையில் உள்ளது.
2. மேலும் திருநெல்வேலி, விருதுநகர் மற்றும் ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் 1209 மெகாவாட் திறன் கொண்ட சூரிய ஒளி மின் உற்பத்தி தொடங்கும் பணியும் நடைபெற்று வருகிறது.

9. NLC இந்தியா சார்பில் அண்மையில் **சூரிய மின்சக்தி திட்டம்** எங்கு தொடங்கப்பட்டுள்ளது?

**விடை: விருதுநகர், திருநெல்வேலி**

**விளக்கம்:**

1. விருதுநகரில் உள்ள தொப்பளாக்கரை மற்றும் சேதுபுரம் ஆகிய இடங்களில் தலா 100 மெகாவாட் திறன் கொண்ட சூரியமின்சக்தி திட்டமும், **திருநெல்வேலி மாவட்டம் செல்லையா செழிய நல்லூரில் 100 மெகாவாட் சூரிய மின்சக்தி திட்டமும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.**

10. தமிழ்நாடு **மீன்வள பல்கலைக்கழகம்** எங்கு உள்ளது?

**விடை: பனங்குடி (நாகப்பட்டினம்)**

**விளக்கம்**

1. இப்பல்கலைக்கழகம் அப்போதைய முதல் ஜெ.ஜெயலலிதா அவர்களால் 2012ல் தொடங்கப்பட்டது.
2. இப்பல்கலைக்கழகத்தின் பெயரை தமிழ்நாடு ஜெ.ஜெயலலிதா மீன்வள பல்கலைக்கழகம் என்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

11. **தமிழகத்தின் எய்ம்ஸ் மருத்துவமனை** எங்கு அமைக்க மத்திய அரசு அனுமதி அளித்து உள்ளது?

**விடை: தோப்பூர் (மதுரை)**

**விளக்கம்:**

1. இம்மருத்துவமனை **"பிரதான் மந்திரி ஸ்வஸ்தய சுரக்ஷா யோஜனா"** திட்டத்தின் அமைய உள்ளது.
2. இத்தேர்வு இடத்தை பிரதான் மந்திரி ஸ்வஸ்தய சுரக்ஷா யோஜனா திட்ட இயக்குனர் சஞ்சய் ராய் தமிழக அரசுக்கு அனுப்பி உள்ளார்.
3. தமிழகத்தில் எய்ம்ஸ் மருத்துவணை அமைக்க செங்கல் பட்டு, தஞ்சாவூரின் செங்கிப்பட்டி, ஈரோடின் பெருந்துறை, புதுக்கோட்டை, மதுரையின் தோப்பூர் ஆகிய இடங்களில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.
4. 2015 பிப்ரவரி 28ல் தாக்கல் செய்யப்பட்ட மத்திய பட்ஜெட்டில் தமிழ்நாடு, பஞ்சாப், ஹிமாச்சலப் பிரதேசம், அசாம் மற்றும் ஜம்மு – காஷ்மீர் ஆகிய இடங்களில் எய்ம்ஸ் மருத்துவணை அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

12. **நீல கொடி கடற்கரை திட்டத்தில்** அண்மையில் எந்த கடற்கரை தேர்வு செய்யப்பட்டுள்ளது?

**விடை: காரைக்கால் கடற்கரை**

**விளக்கம்:**

1. இதன் மூலம் காரைக்கால் உலக வரைப்படத்தல் இடம்பெறும் வாய்ப்பு ஏற்படும்.

13. தமிழகத்தில் எங்கு **சர்வதேச யோகா மற்றும் இயற்கை மருத்துவ மையம்** அமைக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது?

**விடை: செங்கல்பட்டு**

**விளக்கம்:**

1. செங்கல்பட்டு அரசு மருத்துவக்கல்லூரியில் அமைக்கப்படும் இது இந்தியாவிலேயே முதல் சர்வதேச யோகா மற்றும் இயற்கை மருத்துவ மையம் ஆகும்.

14. காவிரி மேலாண்மை ஆணையத்தின் கர்நாடகா பிரதிநிதியாக அம்மாநில முதல்வர் குமாரசாமியால் அறிவிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை: ராகேஷ்சிங்**

**விளக்கம்:**

1. காவிரி ஒழுங்காற்று குழுவின் கர்நாடகா பிரதிநிதியாக H.R. பிரசன்னா குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.
2. காவிரி மேலாண்மை ஆணையத்தின் தலைமையிடம் - புதுடெல்லி
3. காவிரி ஒழுங்காற்று குழுவின் தலைமையிடம் - பெங்களுரு

15. **சென்னை – சேலம் இடையிலான 8-வழி பசுமைசாலை** எந்த திட்டத்தின்படி அமைக்கப்பட உள்ளது?

**விடை: பாரத்மலா பிரயோஜா**

**விளக்கம்:**

1. இத்திட்டம் 2015ல் தொடங்கப்பட்டது. இதன்படி 83,677 கிலோமீட்டர் தொலைவு சாலைகளை இந்தியா முழுவதும் அமைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
2. மத்திய சாலைபோக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் - நிதின் கட்கரி ஆவார்.

16. பாரத மாத ஆலையம் தமிழகத்தில் எங்கு அமைக்கப்படுவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது?

**விடை: பாப்பாரப்பட்டி**

**விளக்கம்:**

1. விடுதலை போராட்ட வீரரான சுப்ரமணிய சிவா பாப்பாரப்பட்டியில் பாரத மாதா ஆலையம் கட்டுவதற்காக சுதந்திரத்திற்கு முன்னரே நிலம் வாங்கி இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர் சித்த ரஞ்சன் தாஸ் அவர்களால் அடிக்கல் நாட்டினார்.

17. **காவிரி மேலாண்மை ஆணைத்தின் முதல் கூட்டம்** எப்போது நடைபெற உள்ளது?

**விடை : ஜூலை 2**

**விளக்கம்:**

1. காவிரி மேலாண்மை ஆணைத்தின் தலைவர் மசூர் ஹுசைன் தலைமையில இக்கூட்டம் நடைபெற உள்ளது.
2. காவிரி தொடர்பான வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பு ஜூன் 1ல் மத்திய அரசிதலில் வெளியிடப்பட்டது.
3. காவிரி ஒழுங்காற்று குழுவின் தலைவர் நவீன்குமார்.

18. எந்த தினம் முதல் அரசு அலுவலகங்களில் ஒரு முறை மட்டுமே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருள்களுக்கு மதுரை மாவட்டத்தில் தடைவிதிக்கப்பட்டுள்ளது?

**விடை: ஜூலை 2**

**விளக்கம்:**

1. ஜனவரி 1, 2019 முதல் தமிழகம் முழுவதும் ஒரு முறை மட்டும் பயன்படுத்தக்கூடிய பாலித்தீன் பைகள், பிளாஸ்டிக் டம்ளர், பிளாஸ்டிக் விரிப்புகள் உள்ளிட்ட பொருள்களுக்கு தடைவிதிக்கப்படும் என தமிழக முதல்வர் அண்மையில் அறிவித்திருந்தார்.

2. இதனை நடைமுறைப்படுத்தும் வகையில மதுரை மாநகராட்சிகளில் அனைத்து அரசு அலுவலகங்கள் மருத்துவமனைகள், பள்ளி மற்றும் கல்லூரிகளில் இது முழுமையாக அமல்படுத்தப்படும்.

19. மகப்பேற்றின் போது தாய்மார்கள் இறக்கும் விகிதத்தை குறைத்ததற்காக விருது பெற்ற மாநிலம் எது?

**விடை: தமிழ்நாடு**

**விளக்கம்:**

1. இவ்விருதை மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஜே.பி.நட்டா வழங்கினார்.

2. 2015க்குள் இறப்பு விகிதத்தை 139 ஆக குறைக்க வேண்டும் என்ற மில்லினியம் வளர்ச்சி இலக்கை தமிழகம் குறிப்பிட்ட காலத்துக்கு முன்னதாக அடைந்தது.

20. காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையம் உள்ளிட்ட அமைப்புகளுக்கு தமிழக அரசின் சார்பில் பரிந்துரைக்கப்பட்ட இரண்டு பிரதிநிதிகள் யார்?

**விடை: S.K. பிரபாகர், R. செந்தில்குமார்**

**விளக்கம்:**

1. இதில் S.K. பிரபாகர் பகுதிநேர உறுப்பினராகவும், R. செந்தில்குமார் ஒழுங்காற்று குழுவின் உறுப்பினராகவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

2. இந்த ஆணையத்தின் தலைவரை மத்திய அரசு நியமிக்கும். அவரின் பதவிகாலம் 5 ஆண்டுகள் அல்லது 65 ஆண்டுகள்.

3. மேலும் 2 முழுநேர உறுப்பினர்கள் மற்றும் 2 பகுதி நேர உறுப்பினர்களையும் மத்திய அரசு நியமிக்கும்.

# தேசிய நிகழ்வுகள்

1. கோவா மாநிலம் உருவான தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?

**விடை: மே 30**

**விளக்கம்:**

1. 1987ல் டையூ-டாமனிலிருந்து பிரிந்து இம்மாநிலம் உருவாக்கப்பட்டது.
2. இது இந்தியாவின் மிகச்சிறிய மாநிலம் ஆகும். மக்கள் தொகை அடிப்படையில் நான்காவது மிகக்குறைந்த மக்கள் தொகையுடைய மாநிலம் ஆகும்.
3. பானாஜி இம்மாநில தலைநகரமாகும. வாஸ்கோடகாமா இங்குள்ள மிகப்பெரிய நகரமாகும்.
4. வாஸ்கோடகாமா என்பவர் இந்தியாவிற்கு கடல்வழி கண்டறிவதில் வெற்றி பெற்ற முதல் ஐரோப்பியர் ஆவார்.

2. முத்ரா திட்டம் எப்போது தொடங்கப்பட்டது?

**விடை: 2015 ஏப்ரல் 8**

**விளக்கம்:**

1. சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் வளர்ச்சிக்காக இந்தியா அரசால் உருவாக்கப்பட்டதுதான் இந்த பிரதான் மந்திரி முத்ரா யோஜனா திட்டம்
2. முத்ரா திட்டம் மூன்று வழிகளில் குறுதொழில் முனைவோருக்கு தங்களின் தொழிலை மேம்படுத்த மற்றும் விரிவுபடுத்த கடன் வழங்குகிறது. அவை முறையே

1) சிசு - இத்திட்டம் மூலமாக 50,000 வரை கடன் பெறலாம்

2) கிஷோர் - இத்திட்டம் மூலமாக 50,000 முதல் 5 லட்சம் வரை கடன் பெறலாம்

3) தருண் - இத்திட்டம் மூலமாக 5 லட்சம் முதல் 10 லட்சம் வரை கடன் பெறலாம்


We Shine Academy TM

3. கருப்பு பண ஒழிப்பிற்காக இந்திய அரசால் தொடங்கப்பட்ட செயலி எது?

**விடை: BHIM App**

**விளக்கம்:**

1. அம்பேத்கர் பெயரை மையமாக வைத்து இது தொடங்கப்பட்டது
2. BHIK App 2016 டிசம்பர் 30ல் தொடங்கப்பட்டது
3. இதேபோல் இநதியாவில் பயன்பாட்டிலிருக்கும் பண பரிவர்த்தனைகளுக்கான மூன்று முன்னணி செயலிகளை (BHIM, RUPAY, SBI) பிரதமர் நரேந்திர மோடி சிங்கப்பூரில் தொடங்கி வைத்தார்.

4. கடற்படைகளுக்கு இடையேயான சரக்கு போக்குவரத்து ஒத்துழைப்பு உட்பட எத்தனை ஒப்பந்தங்களில் இந்தியா சிங்கப்பூருடன் கையெழுத்திட்டுள்ளது?

**விடை: 8**

**விளக்கம்:**

1. பிரதமர் நரேந்திர மோடி ஜூன் 1ம் தேதி சிங்கப்பூரில் நடைபெற்ற கூட்டத்தில் ஷாங்கரி-லா உரையாடலில் (Shangri-La Dialogue) தனது பிரதான உரையை நிகழ்த்திய முதல் இந்திய பிரதமர் ஆவார்.
2. இதன் பின் சிங்கப்பூர் பிரதமர் லீ ஹெய்சன் லோங்யை சந்தித்து இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்துவதற்கான 8 ஒப்பந்தங்களையும் கையெழுத்திட்டனர்.

5. இலவச உணவு வழங்க மத்திய அரசால் கொண்டு வரப்பட்ட புதிய திட்டம் எது?

**விடை: சேவா போஜனா யோஜனா (Seva Bhoj Yojana)**

**விளக்கம்:**

1. இந்த திட்டத்தை செயல்படுத்த 2018-19 மற்றும் 2019-20 ம் ஆண்டுகளுக்கு மட்டும் ரூ.325 கோடியை மத்திய அரசு ஒதுக்கியுள்ளது.
2. பொது மக்கள் மற்றும் பக்தர்களுக்கு எந்த வித பாகுபாடுமின்றி உணவு வழங்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

6. இந்தியாவின் முதல் மேம்பட்ட தடய ஆய்வுக்கூடம் (First Advanced Forensic Lab) எங்கு அமைக்கப்பட உள்ளது?

**விடை: சண்டிகர்**

**விளக்கம்:**

1. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி மேனகா சஞ்சய் காந்தி அவர்கள் "Sakhi Suraksha Advanced DNA Forensic Lab"–யை சண்டிகரில் அமைக்க அடிக்கல் நாட்டினர்.

7. இந்தியா எந்த நாட்டுடன் நர்சிங்கில் தனது பரஸ்பர அங்கீகார ஒப்பந்தத்தை (MRA-Mutual Recognition Agreement) மேற்க் கொண்டுள்ளது?

**விடை: சிங்கப்பூர்**

**விளக்கம்:**

1. இது இந்தியா, தனது இலவச வர்த்தக ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ள நாடுகளுடன் (FTA Partners) கையெழுத்திடும் முதல் MRA ஆகும்.
2. FTA – Free Trade Agreements
3. இதன் மூலம் இந்தியாவிலுள்ள நர்சிங் நிறுவனங்களை விரிவுப்படுத்தி சிறப்பான சுகாதார சேவைகளை வழங்க முடியும்.

8. மகாத்மா காந்தியின் எத்தனையாவது பிறந்தநாளைக் கொண்டாட மத்திய அரசால் தேசிய குழு (Mational Committee) ஏற்படுத்தப்பட்டுள்ளது?

**விடை: 150வது பிறந்தநாள்**

**விளக்கம்:**

1. தேசியக் குழுவின் தலைவர் - இந்தியக் குடியரசுத் தலைவர் ஸ்ரீ ராம்நாத் கோவிந்த்
2. இந்த தேசியக் குழுவின் முதல் கூட்டம் இன்று (ஜூன் - 2) டெல்லியில் நடைபெற்றது.

We Shine Academy TM

3. இக்கூட்டத்தின் முடிவில் பிரதமர் மோடியின் தலைமையில் நிர்வாகக் குழு (Executive Committee) ஒன்று ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டது

9. உலகிலேயே சூரிய மின்சக்தியில் இயங்கும் முதல் சர்வதேச விமான நிலையம் எங்கு கட்டப்பட்டு வருகிறது?

**விடை: கொச்சி**

**விளக்கம்:**

1. கேரளாவின் பன்னாட்டு விமான நிலையமான இது 1999 ஜூன் 10ல் திறக்கப்பட்டது.

10. வங்கிகளில் அமைக்கப்பட்டுள்ள ஆதார் மையம் மூலம் நாளொன்றுக்கு எத்தனை நபர்களுக்கு ஆதார் எண் உருவாக்க அல்லது திருத்தம் செய்ய இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI) இலக்கு நிர்ணயித்துள்ளது?

**விடை: 8**

**விளக்கம்:**

1. இதற்கு முன் இந்த இலக்கு 16 ஆக இருந்தது. ஆனால் வங்கிகளின் கோரிக்கை ஏற்று இதனை 8 ஆக குறைக்கப்பட்டுள்ளது.
2. எனினும் இதை அக்டோவர் 1 முதல் 12 ஆகவும், அடுத்த ஆண்டு ஜனவரி 1 முதல் 16 ஆகவும் உயர்த்தப்படும் எனவும் இந்திய தனித்துவ ஆணையம் தெரிவித்துள்ளது.
3. **UIDAI – Unique Identification Authority of India**

11. ஆதார் மெய்நிகர் எண்ணை நடைமுறைப்படுத்த எப்போது வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது?

**விடை: ஜூலை 1**

We Shine Academy™

**விளக்கம்:**

1. இதற்குள் வங்கிகள், சேவை நிறுவனங்கள் அனைத்தும் இந்த புதிய நடைமுறையை கொண்டுவர வேண்டும் என இந்திய தனித்துவ அடையாள ஆணையம் கூறியுள்ளது.
2. 12 இலக்கங்களை கொண்ட ஆதார் எண் மூலம் தனிநபர் தகவல்கள் திருடப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்ததையொட்டி 16 இலக்கங்களை கொண்ட இந்த மெய் நிகர் எண் உருவாக்கப்படுகிறது.
3. இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI)
4. தொடக்கம் - 2009 ஜனவரி 28
5. தலைவர் - J. சத்தியநாராயணா
6. தலைமை நிர்வாக அதிகாரி - அஜய் பூசன் பாண்டே

12. உலகின் 100 சிறந்த பல்கலைக்கழகங்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ள இந்தியப் பல்கலைக்கழகம் எது?

**விடை: IISc, பெங்களூரு**

**விளக்கம்:**

1. Indian Institute of Science என்று அழைக்கப்படும் இந்த பல்கலைக்கழகம் பட்டியலில் 91வது இடத்தைப் பிடித்த இந்தியாவின் ஒரே பல்கலைக்கழகம் ஆகும்.
2. இதில் முதலிடத்தை ஹார்வர்டு பல்கலைக்கழகம் பிடித்துள்ளது.

13. தெலுங்கானாவின் எந்த நினைவுச்சின்னத்தை புதுபிக்க அம்மாநில அரசு NTPC உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது?

**விடை: சார்மினார் (Charminar)**

**விளக்கம்:**

1. NTPC – National Thermal Power Corporation Ltd.
2. சார்மினார் முஸ்லீம் கட்டிட கலையை ஒத்த நினைவுச் சின்னமாகும்.

We Shine Academy ™

3. இது தெலுங்கானாவின் ஹைதராபாத்-இல் உள்ளது.

14. கவர்னர்கள் மற்றும் லெப்டினன் கவர்னர்களுக்கான 2 நாள் மாநாடு எங்கு நடைபெற்றது?

**விடை: ராஷ்டிரபதி பவன்**

**விளக்கம்:**

1. ஜுன் 4 மற்றும் 5 ம் தேதிகளில் நடைபெற்று வரும் இம்மாநாட்டிற்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்கள் தலைமை தாங்கினார்.
2. இது ராஷ்டிரபதி பவனில் நடைபெறும் 49வது மாநாடு ஆகும்.
3. கவர்னர்களுக்கான முதல் மாநாடு 1949ல் இராஜாஜி அவர்களின் தலைமையில் நடைபெற்றது.
4. இராஜாஜி சுதந்திர இந்தியாவின் முதல் இந்திய கவர்னர் ஜெனரல் ஆவார்.

15. சுற்றுச்சூழல் அமைச்சகம் ஒரு வள செயல்திறன் மின்கலத்தை (Resource Efficiency Cell) உருவாக்க எந்த அமைப்புடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட்டுள்ளது?

**விடை: TERI – The Energy and Resource Institute**

**விளக்கம்:**

1. இதேப்போல், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் MoEFCC ஆகிய அமைப்புகள் கூட்டாக இணைந்து இந்தியாவில் ஐரோப்பிய ஒன்றிய வள திறன் ஊக்குவிப்பு திட்டத்தை (EU-REI) செயல்படுத்த TERI உடன் ஒப்பந்தமிட்டுள்ளன.

16. NMCG, Yes Bank உடன் இணைந்து டெல்லிலுள்ள யமுனை ஆற்றின் எந்தப் பகுதியை சுத்தம் செய்ய முன்வந்துள்ளது?

**விடை: காளிந்த் குஞ்ஜ் காட்**

**விளக்கம்:**

1. வரும் உலக சுற்றுச்சூழல் தினம் 2018-யை முன்னிட்டு இந்நடவடிக்கையை NMCG மேற்கொண்டுள்ளது
2. NMCG – National Mission for Clean Ganga
3. பிளாஸ்டிக் கழிவுப்பொருட்களிலிருந்து மற்ற திடக்கழிவுகளை பிரிப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.

17. “ப்ளு ∴ப்ளாக்” எனப்படும் சா்வதேச தரச்சான்றிதழ் பெறும் வகையில், ஆசியாவில் முதல் முறையாக இந்தியாவைச் சேர்ந்த எத்தனை கடற்கரைக்ள மேம்படுத்தப்பட்டு வருரகின்றன?

**விடை: 13**

**விளக்கம்:**

1. “ப்ளு ∴ப்ளாக்” தரச்சான்றிதழ், பெறுவதற்கு ஒரு கடற்கரை, சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுலா தொடா்பான 33 நிபந்தனைகளுக்கு உள்பட்டதாக இருக்க வேண்டும்.
2. இதில், முதன் முதலாக ஒடிஸாவின் கோனார்க் கடற்கரைப்பகுதி தரச்சான்றிதழ் பெறுவதற்கான அனைத்து தகுதிகளையும் நிறைவு செய்துள்ளது.
3. வரும் ஜூன் 5ம் தேதி உலக சுற்றுச்சூழல் தினத்தன்று அதற்கான “ப்ளு ∴ப்ளாக்” தரச்சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

18. மனித கழிவுகளை மனிதா்களே அல்ல எப்போது தடைவிதிக்கப்பட்டுள்ளது?

**விடை: 1993**

**விளக்கம்:**

1. அப்போது பிரதமராக இருந்த நரசிம்மராவ் இச்சட்டத்தை இயற்றினார்.
2. இச்சட்டம் தமிழ்நாட்டில் 2003 ல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

19. மத்திய அரசின் நான்காவது கொள்கை கூட்டம் (NITI Aayog) எப்போது நடைபெற உள்ளது?

**விடை: ஜூன் 16**

**விளக்கம்:**

1. மோடியின் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் நிதி ஆயோக் துணைத் தலைவர் ராஜீவ் குமார் மற்றும் அதன் உறுப்பினர்களான அனைத்து மாநில முதல்வர்களும் கலந்து கொள்ள உள்ளனர்.

2. திட்டக்குழுவுக்கு பதிலா நிதி ஆயோக் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. இதன்மூலம் 3-ஆண்டு மற்றும் 15-ஆண்டு திட்டங்கள் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.
3. 75வது சுதந்திர தினம் 2022ல் கொண்டாடப்பட உள்ளது. இதற்குள் வறுமை, தூய்மையின்மை, பயங்கரவாதம், ஜாதியப்பிரச்சனை மற்றும் மதவாதம் ஆகியவை முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டும் என நிதி ஆயோக் அறிவித்துள்ளது.

20. 1857-பெரும்புரட்சியை முதல் இந்திய சுதந்திர போர் என்று கூறியவர் யார்?

**விடை: வீரசவார்க்கர்**

**விளக்கம்:**

1. இதன் 50ம் ஆண்டு நிறைவு விழாவை லண்டனில் உள்ள இந்தியா இல்லத்தில் 1907ல் கொண்டாடினார்.

21. E-Waste உற்பத்தியில் உலகளவில் இந்தியா எத்தனையாவது இடத்தில் உள்ளது?

**விடை: 5ம் இடம்**

We Shine Academy™

**விளக்கம்:**

1. இதில் முன்னணியில் உள்ள நாடுகள் சீனா, USA, ஜப்பான், ஜெர்மனி.
2. E-Waste என்பது கணினித் திரை, மதர்போர்டு, போன், சார்ஜர், ஹெட்போன், ஊனு உள்ளிட்டவை ஆகும்.
3. இந்தியாவில் அதிகளவில் E-Waste-யை (19.8மூ) மகாராஷ்ட்ரா மாநிலமே உற்பத்திச் செய்கிறது.

22. Geo Intelligence Asia 2018-ன் 11வது பதிப்பு எங்கு நடைபெற்றது?

**விடை: மனெக்சாவ் மையம் (Manekshaw Centre), டெல்லி**

**விளக்கம்:**

1. ஜூன் 4 மற்றும் 5ம் தேதிகளில் புது டெல்லியில் நடைபெற்ற இக்கூட்டத்தை Geo Spatial Media and Communication மற்றும் இராணுவ ஆய்வு அமைப்பு ஆகியவை இணைந்து நடத்தின.
2. இதன் கருப்பொருள்: “ஜியோ ஸ்பாட்டியல்: பாதுகாப்பு துறை மற்றும் தொழில் துறையில் பாதுகாப்பை பன்மடங்காக்குதல்”. (Geo Spatial: A Force Multiplier for Defence and Industrial Security)

23. இந்தியாவின் எந்த மாநிலம் வரும் அக்டோபர் 2, 2018க்குள் ODF நிலையை (Open Defecation Free Status) அடைய முயற்சித்து வருகிறது?

**விடை: உத்திரப்பிரதேசம்**

**விளக்கம்:**

1. உத்திரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத், லக்னோவில் Swachh Bharat Mission Gramin (SBM-G)-ன் நிலைகளை வீடியோ கான்பெரன்சிங் மூலம் ஆய்வு செய்தார்.
2. இதன்படி, திறந்தவெளி மலம் கழிக்கும் முறை (ODF Status) அற்ற மாநிலமாக வரும் அக்டோபர் 2க்குள் உத்திரப்பிரதேசம் உருபெரும் என அவர் கூறினார்.

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344

www.weshineacademy.com

3. தேசிய அளவில் ஒவ்வொரு மாநிலமும் அக்டோபர் 2, 2019க்குள் ODF நிலையை அடைய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

24. திரிபுரா மாநில அரசின் பழமாக அறிவிக்கப்பட்ட பழம் எது?

**விடை:அன்னாசிப்பழம்**

**விளக்கம்:**

1. இதனை, குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் திரிபுரா தலைநகர் அகர்தலாவில் நடைபெற்ற விழாவில் அதிகாரப்பூர்வமாக அறிவித்தார்.

25. தெர்மாகோலால் செய்யப்பட்ட தட்டுகளுக்கு தடைவிதித்த மாநிலம் எது?

**விடை: ஹிமாச்சலப் பிரதேசம்**

**விளக்கம்:**

1. ஹிமாச்சலப் பிரதேசத்தின் முதல்வர் ஜெய் ராம் தாகூர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.
2. மேலும், பிளாஸ்டிக் பாட்டில்களின் பயன்பாட்டை குறைக்க அரசுப் பள்ளிகளில் படிக்கும் ஒவ்வொரு மாணவருக்கும் ஸ்டீல் பாட்டில்கள் வழங்கப்பட உள்ளதாகவும் கூறினார்.
3. இதேபோல் அறிவியல் முறையில் கழிவுகளை மேலாண்மை செய்ய 10 திடக்கழிவு மேலாண்மை நிலையங்கள் அமைக்கப்படும் என்றும் தாகூர் அறிவித்தார்.

26. எவரெஸ்ட் சிகரத்தை அடைய NIMAS பயணக் குழுவை கொடி அசைத்து பயணத்தை துவங்கி வைத்தவர் யார்?

**விடை: நிர்மலா சீதாராமன் (பாதுகாப்பு துறை அமைச்சர்)**

**விளக்கம்:**

1. NIMAS – National Institute for Mountaineering & Allied Sports
2. NIMAS என்பது மலையேறுபவர்களுக்கு பயிற்சி அளிக்கும் ஒரு அமைப்பாகும்.

3. இது அருணாச்சலப் பிரதேசத்திலுள்ள திராங் (Dirang) என்ற இடத்தில் அமைந்துள்ளது.
4. NIMAS – யைச் சேர்ந்த கால் சர்.ஃப்ராஸ் சிங் என்பவர் தலைமையில் முதல் முறையாக 8 பேர் அடங்கிய குழு நேபாள் பக்கமிருந்து எவரெஸ்ட் சிகரத்தை அடைய முயற்சி மேற்கொண்டுள்ளது.

27. மகப்பேறு காலங்களில் ஏற்படும் தாய்மார்களின் இறப்பு விகிதம் எத்தனை சதவீதமாக குறைந்துள்ளது?

**விடை: 22%**

**விளக்கம்:**

1. 2013ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது தாய்மார்களின் இறப்பு விகிதம் 2016ல் குறிப்பிடத்தக்க அளவு குறைந்துள்ளதாக தற்சமயம் வெளியான SRS Bulletin குறிப்பிட்டுள்ளது.
2. 2013ல் 167ஆக இருந்த இறப்பு விகிதம் 2014-16ல் 130 ஆக குறைந்துள்ளது.

28. நீர் வளங்கள், நதி அபிவிருத்தி மற்றும் கங்கா புத்துணர்வு அமைச்சகத்தின் எந்த திட்டத்திற்கு உலக வங்கி கடன் வழங்க முன்வந்துள்ளது?

**விடை: அடல் புஜல் யோஜனா (ABHY – Atal Bhujal Yojana)**

**விளக்கம்:**

1. ரூ.6000 கோடியை இந்தத் திட்டத்தை செயல்படுத்த உலக வங்கி உள்ளது.
2. இந்த திட்டம் 2018-19 முதல் 2022-23க்குள் (5 ஆண்டுகளில்) செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

29. உலக அமைதி குறியீடு 2018-ல் (World Peace Index) இந்தியா எத்தனையாவது இடத்தில் உள்ளது?

**விடை: 137**

**விளக்கம்:**

1. Australian think tank என்ற அமைப்பு வெளியிட்ட அறிக்கைப் படி, 2018ம் ஆண்டிற்கான உலக அமைதி குறியீட்டில் இந்தியா 4 இடங்கள் முன்னேறி 137வது இடத்தில் உள்ளது.
2. இதில் மொத்தம் 163 நாடுகள் இடம்பெற்றுள்ளன.
3. முதல் ஐந்து இடங்கள் முறையே ஐஸ்லாந்து, நியூஸிலாந்து, ஆஸ்ட்ரியா, போர்ச்சுக்கல் மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகள் பிடித்துள்ளன.

30. ஆந்திர பிரதேச மாநிலத்தின் புதிய தலைநகரை சீரமைக்க அம்மாநில அரசு எந்த நாட்டுடன் பல ஒப்பந்தங்களைக் கையெழுத்திட்டுள்ளது?

**விடை: சிங்கப்பூர்**

**விளக்கம்:**

1. ஆந்திர பிரதேசத்தின் புதிய தலைநகரான அமராவதியை உலகத் தரம் வாய்ந்த நகரமாக உருவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
2. இந்நகரின் உள்ளகட்டமைப்புகளை மேம்படுத்த, சிங்கப்பூர் தொழிற்சாலைகளிடம் 1691 ஏக்கர் நிலங்கள் 3 கட்டமாக வழங்கப்பட உள்ளது.

31. உலகத் தரம் வாய்ந்த 200 பல்கலைக்கழகங்களின் தரவரிசையில் (QS World University Rankings 2019) இந்தியாவின் எத்தனை பல்கலைக்கழகங்கள் இடம் பெற்றுள்ளன?

**விடை: 3**

**விளக்கம்:**

1. இதில் IIT Bombay, IISc Banglore மற்றும் IIT Delhi ஆகியவை இடம் பெற்றுள்ளன.
2. IIT Bombay 2018ம் ஆண்டை விட 17 இடங்கள் முன்னேறி 162வது இடத்திலும், IIT Delhi 172வது இடத்திலும், IISc 170வது இடத்திலும் உள்ளன.

3. இதில் Massachusetts Institute of Technology, US தொடர்ந்து 7வது முறையாக முதலிடத்தில் உள்ளது.

32. ODF – நிலையை அடைந்த நாட்டின் முதல் பெரிய மாநிலம் எது?

**விடை: ஆந்திர பிரதேசம்**

**விளக்கம்:**

1. ஆந்திர மாநில முதல்வர் என்.சந்திரபாபு நாயுடு, மாநிலம் முழுவதும் 2.77 லட்சம் தனி கழிப்பறைகளைக் கட்டும் இலக்கை அடைந்திருப்பதாக அறிவித்தார்.
2. இதன் மூலம் ஆந்திர மாநிலம் திறந்தவெளி கழிவு முறை அற்ற (ODF status – Open Defecation Free status) மாநிலமாக மாறியுள்ளது.

33. இந்திய பிரதமர் மோடி SCO உச்சி மாநாட்டில் கலந்துக் கொள்வதற்காக எந்த நாட்டிற்குச் சென்றுள்ளார்?

**விடை: சீனா**

**விளக்கம்:**

1. SCO Summit – Shanghai Cooperation Organization Summit
2. சீனாவில் Qingdao-ல் நடைபெறும் 2 நாள் SCO உச்சி மாநாட்டில் முழுநேர உறுப்பினராக இந்தியா பங்கேற்பது இதுவே முதல் முறையாகும்.
3. தலைநகரம் : பெய்ஜிங்
4. அதிபர் : ஜீ ஜின்பிங் (சீனா கம்யூனிஸ்ட் கட்சி)
5. பிரதமர் : லி கிகாங்
6. நாணயம் : ரென்மின்பி

34. சிக்கிம் மாநிலத்தின் நீண்ட சுரங்கப்பாதையின் நீளம் என்ன?

**விடை: 578 மீட்டர்**

**விளக்கம்:**

1. இது வடக்கு சிக்கமிலுள்ள சுங்ந்தாங் என்ற இடத்திலுள்ள தேங் (Theng) என்ற பாறைக்குன்றுகளை குடைந்து உருவாக்கப்பட்டது.
2. இது சிக்கிம் தலைநகா் கேங்டாக் (Gangtok)-யை சுங்ந்தாங் (Chungthang) நகருடன் இணைக்கிறது.
3. இதனை அம்மாநில பாதுகாப்பு துறை அமைச்சா் சுபாஷ் ராம்ராவ் பாம்ரே திறந்து வைத்தாா்.

35. கலிங்கா இலக்கிய திருவிழா (Kalinga Literary Festival) எங்கு துவங்கியது?

**விடை: ஒடிசா**

**விளக்கம்:**

1. ஒடிசாவின் புவனேஷ்வரில் KLF-ன் 5வது பதிப்பை மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சா் தா்மேந்திர பிரதான் துவங்கி வைத்தாா்.

36. 2018ம் ஆண்டிற்கான "Global 2000" பட்டியலில் எத்தனை இந்திய நிறுவனங்கள் இடம் பிடித்துள்ளன?

**விடை: 58**

**விளக்கம்:**

1. ∴போா்ப்ஸ் பத்திரிக்கை வெளியிட்ட உலகின் தலை சிறந்த 2000 பெருநிறுவனங்கள் பட்டியலில், இந்தியாவின் RIL (Reliance Industries Ltd) நிறுவனம் 83வது இடத்திலும், ர்னுகுஊ வங்கி 202 இடத்திலும் உள்ளன.
2. சீனாவின் Industrial & Commercial Bank of China தொடா்ந்து 6வது ஆண்டாக முதலிடத்தல் உள்ளது.

37. காவிரி ஒழுங்காற்று குழுவின் தலைமையிடம் எங்கு அமைய உள்ளது?

**விடை: பெங்களுரு**

**விளக்கம்:**

1. இதன் தலைவர் நீர்வளத்துறையை சார்ந்தவராக இருக்க வேண்டும்.
2. இவ்வாணையத்திற்கு தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகியவை தலா ஒரு பகுதி நேர உறுப்பினரை நியமிக்கலாம்

38. குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்புக்கான அவசர உதவி எண் எது?

**விடை: 1098**

**விளக்கம்:**

1. இந்த சேவையை மேலும் 435 இடங்களுக்கும் முக்கிய ரயில் நிலையங்களுக்கும் விரிவுபடுத்த மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.
2. 2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் 1 கோடி குழந்தை தொழிலாளர்கள் இருப்பதாக யுனிசெ.ஃப் ஆய்வு முடிவு தெரிவிக்கிறது.
3. யுனிசெ.ஃப் (UNICEF – United Nations Children's Fund) என்பது ஐக்கிய நாடுகளின் சிறுவர்களுக்கான நிதியம் ஆகும்.

39. அடல்பென்சன் யோஜனா திட்டத்தின் கீழ் பெறும் ஓய்வு ஊதியம் எவ்வளவாக உயர்த்தப்பட உள்ளது?

**விடை: ரூ.10,000**

**விளக்கம்:**

1. 2015ல் தொடங்கப்பட்ட இத்திட்டத்தில் அமைப்புசாரா தொழிலாளர்கள் ஒரு குறிப்பிட்ட நிதி செலுத்தி, தனது 60 ஆண்டுக்கு பிறகு 1000 முதல் 5000 ரூபாய் வரை ஓய்வு ஊதியம் பெறும் வகையில் இத்திட்டம் முன்மொழியப்பட்டது.

40. விவசாயிகளுக்கு ரூ.5 லட்சம் வரை ஆயுள் காப்பீடு வழங்குவதற்காக தனித்துவமிக்க ஒரு திட்டத்தை அறிவித்துள்ள மாநில அரசு எது?

**விடை: தெலுங்கானா**

**விளக்கம்:**

1. இதன்படி 18 முதல் 59 வயது வரையுள்ள விவசாயிகள் இயற்கை மரணம் உள்ளிட்ட எந்தக் காரணத்தால் உயிரிழந்தாலும் அவர்களது குடும்பத்துக்கு 5 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
2. ஆகஸ்டு 15 முதல் LIC உடன் இணைந்து தொடங்கப்படும் இத்திட்டத்தில் விவசாயிகளுக்காக காப்பீட்டுத் தொகையை அரசே செலுத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

41. நவரத்னா பாதுகாப்பு பொதுத்துறை நிறுவனமான BEI-ன் முதல் பிரதிநிதித்துவ அலுவலகத்தை வியட்நாமில் துவங்கி வைத்தவர் யார்?

**விடை: நிர்மலா சீதாராமன்**

**விளக்கம்:**

1. இந்திய பாதுகாப்பு துறை அமைச்சரான இவர், வியட்நாமின் ஹனோய் நகரில் துவங்கி வைத்தார்.

2. BEL – (Bharat Electronics Limited) என்பது இந்தியாவின் முன்னணி பாதுகாப்பு மின்னணு நிறுவனமாகும்.

42. மத்திய அமைச்சரவைக் குழு எந்தப் பல்கலைக்கழகம் தொடர்பான மசோதாவை திரும்பப் பெற ஒப்புதல் அளித்துள்ளது?

**விடை: நாளந்தா பல்கலைக்கழகம்**

**விளக்கம்:**

1. பிரதமர் மோடி தலைமையிலான கேபினெட் குழு, ராஜ்ய சபாவில் நிலுவையிலுள்ள நாளந்தா பல்கலைக்கழக திருத்த மசோதா 2013-யை திரும்ப பெற முடிவு செய்துள்ளது.
2. இதேப்போல் வடகிழக்கு கவுன்சிலை மறுசீரமைக்கவும், இந்தியாவில் உயர் வேளாண் கல்வியை வலுப்படுத்துவதற்கான 3 ஆண்டுகால திட்டத்திற்கும் ஒப்புதல் வழங்கியுள்ளது.

43. யானைக்கால் வியாதியை அகற்றுவதற்கான 10வது உலக மாநாட்டை (10th Meeting of Global Alliance to Eliminate Lymphatic Filariasis) துவங்கி வைத்தவர் யார்?

**விடை: J.P. நட்டா**

**விளக்கம்:**

1. இவர் இந்தியாவின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ஆவார்.

2. இந்த மாநாட்டின் போது, 2018க்குள் இந்தியாவில் முற்றிலும் யானைக்கால் வியாதியை ஒழிப்பதற்கான திட்டத்தையும் அவர் வெளியிட்டார்.

3. மேலும், 11 நாடுகளுக்கு GAELF Awards (Global Alliance to Eliminate Lymphatic Filariasis Awards)-களை வழங்கினார்.
4. 11 நாடுகள் : கம்போடியா, குக் தீவு, எகிப்து, மாலத்தீவு, மார்சல் தீவு, நியூவே, ஸ்ரீலங்கா, தாய்லாந்து, டோகோ, டோன்கோ மற்றும் வனுவாட் (Vanuatu) ஆகிய நாடுகள் யானைக்கால் வியாதி பரவுதலை தடுத்தமைக்காக இவ்விருது வழங்கப்பட்டது.

44. மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு கூட்டுநீர் மேலாண்மை குறியீட்டை அறிமுகப்படுத்திய அமைப்பு எது?

**விடை: நிதி ஆயோக்**

**விளக்கம்:**

1. மாநிலங்களிலும் யூனியன் பிரதேசங்களிலும் நீர் மேலாண்மையை மேம்படுத்தவும், நீர் மறுசுழற்சி முறையை ஊக்குவிக்கவும் இது வழிவகுக்கிறது.



We Shine Academy ™

45. கனடாவின் கியூபெக் மாகாணத்துடன் தனது பொருளாதார மேம்பாட்டிற்காக ஒப்பந்தம் கையெழுத்திட்டுள்ள மாநிலம் எது?

**விடை: மகாராஷ்ட்ரா**

**விளக்கம்:**

1. குறிப்பாக தகவல் தொழில்நுட்பம், உயிரி தொழில்நுட்பம், செயற்கை அறிவு மற்றும் பழங்குடி சமூகத்தினரின் நலனை மேம்படுத்த இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

46. Yes Bank-ன் பொது இயக்குநராகவும் தலைமை செயல் செயல் அதிகாரியாகவும் (CEO) நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை: ரானா கபூர்**

**விளக்கம்:**

1. இவர் மீண்டும் 3 ஆண்டுகளுக்கு Yes வங்கியின் MD மற்றும் CEO-ஆக நியமிக்கப்பட்டார்.
2. இதேபோல் சுபாஷ் சந்தர் கலியா மற்றும் அஜய்குமார் ஆகியோர் நிர்வாகம் சாராத இயக்குனர்களாக நியமிக்கப்பட்டனர்.

47. தற்போதைய குடியரசுத் தலைவரான ராம்நாத்கோவிந்த் அவர்களால் தள்ளுபடி செய்யப்பட்ட முதல் கருணை மனு எது?

**விடை: ஜகத்ராய் என்பவரின் மரணதண்டனைக்கு எதிரான கருணை மனு**

**விளக்கம்:**

1. அரசியலமைப்பின் **72வது சரத்தின் படி** குடியரசுத் தலைவர் கருணை மனுக்கள் மீது தனிப்பட்ட முறையில் முடிவெடுக்கும் அதிகாரம் பெற்றுள்ளார். இந்த முடிவை எதிர்த்து யாராலும் வழக்கு தொடர இயலாது.
2. இந்த சரத்தின் படி குடியரசுத் தலைவர் ஒருவரது தண்டனையை ரத்து செய்யவோ, ஒரு தண்டணையை வேறொரு தண்டனையாக மாற்றவோ, தண்டனை காலத்தை குறைக்கவோ, தண்டனை நிறைவேற்றும் காலத்தை தள்ளி வைக்கவோ இயலும்.

3. ஆனால் தண்டணையை அதிகரிக்க இயலாது.

48. எந்த ஆண்டிற்குள் அனைவருக்கும் வீடு வழங்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது?

**விடை: 2022**

**விளக்கம்:**

1. 75வது சுதந்திர தினம் கொண்டாடப்படும் 2022க்குள் கிராமபுறங்களில் 3 கோடி வீடுகளும் நகர்புறங்களில் 1 கோடி வீடுகள் கட்ட இலக்கு நிர்ணயித்துள்ளது.
2. வீடு கட்ட 18 மாதங்கள் என்பதை 12 மாதமாக குறைத்துள்ளது. வீட்டின் அளவு 20 சதுரமீட்டர் என்பதற்கு பதில் 25 சதுரமீட்டராக உயர்த்தியுள்ளது.
3. இதேபோல் வீடுகட்ட வழங்கி வந்த உதவித்தொகை ரூ.75000-த்தை இனி 1,25,000மாக உயர்த்தி வழங்கவும் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

We Shine Academy™

49. இந்திய MP-க்கள் குழு எந்தெந்த நாடுகளுக்கு நல்லெண்ண பயணமாக சென்றுள்ளது?

**விடை: பெலாரஸ், லாத்வியா, பின்லாந்து**

**விளக்கம்:**

1. மக்களவை சபாநாயகர் சுமித்ரா மகாஜன் தலைமையில் இக்குழு அந்நாடுகளில் உள்ள வளர்ச்சி திட்டங்கள் பற்றி அறிய சென்றுள்ளனர்.
2. இக்குழுவில் **மக்களவை செயலாளர் ஸ்நேகலதா ஸ்ரீவஸ்தவாவும்** இடம் பெற்றுள்ளார்.

50. இந்தியாவின் முதல் காவல் அருங்காட்சியகம் (Police Museum) எங்கு அமைய உள்ளது?

**விடை: டெல்லி**

**விளக்கம்:**

1. டெல்லியிலுள்ள சாணக்கியபுரி என்னுமிடத்தில் பல்வேறு வசதிகளைக் கொண்ட அருங்காட்சியகம் அமைக்கப்பட உள்ளது.

2. இது வரும் அக்டோபர் 21 அன்று (போலீஸ் நினைவு தினம் - Police Commemoration Day) பிரதமர் மோடி அல்லது உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்களால் திறந்து வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

51. இந்தியாவின் முதல் லித்தியம் அயன்செல் தொழிற்சாலை (Lithium ion Cell Factory) எங்கு அமைய உள்ளது?

**விடை: ஆந்திரப் பிரதேசம்**

**விளக்கம்:**

1. Munoth Industries Limited என்ற நிறுவனம் ரூ.799 கோடி செலவில் இத்தொழிற்சாலையை திருப்பதியில் அமைக்க உள்ளது.
2. இத்தொழிற்சாலை, இந்தியாவில் கைபேசி தொழிற்சாலைகள் அமைய வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
3. இதன் முதல் கட்டமாக ரூ.165 கோடி மதிப்பில் நாளொன்றுக்கு 200000 Ah (Ampere hour) சேமிப்பு திறனுள்ள லித்தியம் அயன்செல்களை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

52. நேபாள் உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை: தீபக் ராஜ் ஜோஷி**

**விளக்கம்:**

1. மார்ச் 15, 2018 முதல் ஜோஷி நேபாள உச்சநீதிமன்றத்தின் தற்காலிக தலைமை நீதிபதியாக பணியாற்றி வந்தது குறிப்பிடத்தக்கது.
2. இவருக்கு முன் அப்பதவியை வகித்தவர் கோபால் பரஜீலி ஆவார்.

53. மத்திய மறைமுக வரி மற்றும் சுங்க வாரியத்தின் (CBIC) தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை: S.ரமேஷ்**

**விளக்கம்:**

1. **CBIC – Central Board of Indirect Taxes and Customs**
2. CBIC – ன் தலைமைப் பதவியிலுள்ள வனஜா.என்.சர்னா-வின் பதவிக்காலம் நடப்பு மாதத்தோடு முடிவடைவதைத் தொடர்ந்து S.ரமேஷ் அப்பொறுப்பை வகிக்க உள்ளார்.

54. இந்தியாவில் உள்ள எந்தெந்த துறைமுகத்தில் கடல்நீரை தூய்மைப்படுத்தி விவசாயத்திற்கு பயன்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது?

**விடை: தூத்துக்குடி, பாரதீப் மற்றும் காண்ட்லா**

**விளக்கம்:**

1. ''ஒவ்வொரு நிலத்திற்கும் தண்ணீர்'' மற்றும் ''ஒரு துளி அதிக துளி'' என்ற தொலைநோக்கு பார்வையுடன் செயல்படுத்தப்பட உள்ள இத்திட்டத்தல் கால்வாய்க்கு பதிலாக குழாய் மூலம் விவசாய நிலங்களுக்கு இத்தூய்மைப்படுத்தப்பட்ட நீர் கொண்டு செல்லப்பட உள்ளது.

55. இந்திய கடலோரக் காவல் படையின் கிழக்கு பிராந்தியத்தில் அண்மையில் இணைக்கப்பட்ட ரோந்து கப்பலின் பெயர் என்ன?

**விடை: ICGS – 400**

**விளக்கம்:**

1. இந்தியா கடலோரக் காவல் படையின் கிழக்கு பிராந்தியத்தின் தலைமையிடம் சென்னையில் உள்ளது.

56. வெளிநாடுவாழ் இந்தியர்களின் திருமணத்தை எத்தனை நாட்களுக்குள் பதிவு செய்யவேண்டும் என மத்தய அரசு அறிவித்துள்ளது?

**விடை: 7 நாள்**

**விளக்கம்:**

1. இந்த அறிவிப்பை மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது. இத்துறையின் தற்போதைய அமைச்சர் மேனகா காந்தி ஆவார்.

57. அணைகள் பாதுகாப்பு மசோதா 2018-க்கு மத்திய அமைச்சரவை எப்போது அனுமதியளித்துள்ளது?

**விடை: ஜுன் 13**

**விளக்கம்:**

1. இதன்படி தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணையம் உருவாக்கப்பட்டு அதன் மூலம் ஒரே மாதிரியான அணை பாதுகாப்பு விதிமுறைகளை உருவாக்க வழிவகை செய்யப்படும்.
2. பிரதமர் ஸ்வத்ய சுரக்ஷா யோஜனா திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 20 AIIMS மருத்துவமனை அமைக்கவும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. இதேபோல் இதற்கு முன் இத்திட்டத்தின் கீழ் 6 AIIMS மருத்துவமனை அமைக்கவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

58. நிதி ஆயோக் நிர்வாக குழுவின் 4-வது கூட்டம் எப்போது நடைபெறுகிறது?

**விடை: ஜுன் 17**

**விளக்கம்:**

1. இதன் உறுப்பினர்கள் அனைத்து மாநில முதல்வர்கள், யூனியன் பிரதேச துணைநிலை ஆளுநர்கள் ஆவார்கள்
2. இதன் முதல் கூட்டம் 2015 பிப்ரவரி : இக்கூட்டத்தில் நிதி ஆயோக்கின் வரையறைகள் மற்றும் நிதி ஆயோக் மத்திய மாநில அரசுகளுக்கிடையே பாலமாக செயல்படவும் முடிவு செய்யப்பட்டது.
3. இரண்டாவது கூட்டம் 2015 ஜுலை 15 : இக்கூட்டத்தில் துணை மற்றும் செயலாக்க குழுக்களின் செயல்பாடுகள் குறித்துத ஆலோசிக்கப்பட்டது.

4. 2017ல் நடைபெற்ற 3வது நிர்வாக குழு கூட்டத்தில், மக்களவை – மாநில சட்டப்பேரவைகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது குறித்த ஆலோசனையை பாரத பிரதமர் முன்வைத்தார்.

59. மத்தியப் பிரதேசத்தில், அனைத்து குழந்தைகளுக்கும் பள்ளிக் கல்வியை வழங்குவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட திட்டம் எது?

**விடை: School Chale Hum Abhiyan 2018**

**விளக்கம்:**

1. இதே போபால் நகரில் மத்தியப் பிரதேச முதல்வர் சிவராஜ் சிங் சௌகான் துவங்கி வைத்தார்.

60. எந்த நிறுவனம், இந்தியாவில் சூரிய சக்தி உருவாக்க திட்டத்தில் பெரிய அளவில் முதலீடு செய்ய உள்ளது?

**விடை: SoftBank Group**

**விளக்கம்:**

1. இந்நிறுவனம் 60 முதல் 100 பில்லியன் வரை இந்த திட்டத்தில் முதலீடு செய்ய உள்ளது.
2. இது தொடர்பாக SoftBank Group (ம) மத்திய அரசு இடையே விரைவில் ஒப்பந்தம் கையெழுத்தாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

61. எந்த மாநிலம் அனைத்து மாவட்டங்களிலும் "குழந்தை பாதுகாப்பு மையத்தை" (Child Protection Unit) ஏற்படுத்த திட்டமிட்டுள்ளது?

**விடை: தெலுங்கானா**

**விளக்கம்:**

1. மொத்தம் 31 மாவட்டங்களைக் கொண்ட தெலுங்கானாவில் ஏற்கெனவே 10 மாவட்டங்களில் இந்த மையம் அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

62. தேசிய சுகாதார திட்டத்தின் 11வது CRM அறிக்கையை வெளியிட்டவர் யார்?

**விடை: ஸ்ரீ அஸ்வினி குமார் சௌபே**

**விளக்கம்:**

1. இவர் மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ஆவார்.
2. CRM – Common Review Mission
3. இவர் இந்த அறிக்கையை வெளியிடுகையில் "மகப்பேறு காலங்களில் ஏற்படும் தாயின் இறப்பு விகிதம் (MMR – Maternal Mortality Ratio) 2011-13ம் ஆண்டுகளில் 167-ஆகவும், 2014-16ம் ஆண்டுகளில் 130 ஆக குறைந்துள்ளது எனவும் தெரிவித்தார்.

63. மத்திய நீர்வள ஆணையம் (CWC) மற்றும் இந்தியாவின் Apex Technical Organization ஆகியவை நீர்வளம் குறித்து எந்த நிறுவனத்துடன் கூட்டு ஒப்பந்தம் கையெழுத்திட்டுள்ளது.

**விடை: GOOGLE**

**விளக்கம்:**

1. CWC, முக்கியமாக வெள்ளப்பெருக்கு மற்றும் பரவலை முன்கூட்டியே Google – ல் செயற்கை நுண்ணறிவு மூலம் கணிக்க திட்டமிட்டுள்ளது.
2. இதேபோல், நீர்வளங்களை சிறந்த முறையில் உபயோகிக்கவும் CWC திட்டமிட்டுள்ளது.
3. இந்த ஒப்பந்தத்தை மத்திய நீர்வளத்துறை அமைச்சர் ஸ்ரீநிதின் கட்கரி Google உடன் கையெழுத்திட்டார்.

64. மத்திய அரசின் தலைமை பொருளாதார ஆலோசகர் யார்?

**விடை : அரவிந்த் சுப்ரமணியன்**

**விளக்கம்:**

1. இவர் தனது பதவியை ராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

2. 3 ஆண்டுகள் பதவிக்காலம் கொண்ட இப்பொறுப்பை 2014 அக்டோபர் 16ல் இவர் ஏற்றார். கடந்த ஆண்டுடன் பதவிக்காலம் நிறைவடைந்தாலும் மேலும் ஒரு ஆண்டு பதவிநீட்டிப்பு செய்யப்பட்டார்.

65. "International Decade for Action: Water for Sustainable Development, 2018-2018"–ற்கான மாநாட்டில் கலந்துக் கொள்ள ஸ்ரீ நிதின் கட்கரி எந்த நாட்டிற்குச் சென்றுள்ளார்.?

**விடை: தஜிகிஜ்தான் குடியரசு**

**விளக்கம்:**

1. 2018 முதல் 2028 வரை நீர் மேலாண்மை செய்வது பற்றிய இந்த கருத்தரங்கத்தை, ஐ.நா. மற்றும் தஜிகிஸ்தான் ஆகியவை இணைந்து நடத்துகின்றன.
2. ஜூன் 20 மற்றும் 21 ஆகிய இரண்டு நாட்களும் நடைபெறும்.

66. Cyber Security Framework – 2018-யை துவங்கி வைத்தவர் யார்?

**விடை: நிர்மலா சீதாராமன்**

**விளக்கம்:**

1. இவர் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஆவார்.
2. இந்தக் கூட்டத்தில் இணையவழிச் சேவை வழங்கலின் போது ஏற்படும் தகவல் திருட்டு உட்பட்ட குற்றங்களை நிவர்த்தி செய்தல், பாதுகாப்பான தகவல் பரிமாற்றத்தை வழங்குதல் ஆகியவற்றிற்கான கருத்துக்கள் ஆலோசிக்கப்பட்டன.

67. எங்கு நடந்த யோகா நிகழ்ச்சி கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது?

**விடை: கோட்டா மாவட்டம் (ராஜஸ்தான்)**


We Shine Academy TM

**விளக்கம்:**

1. பாபா ராம்தேவ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் 1.05 லட்சம் பேர் கலந்து கொண்டு யோகாசானம் செய்ததால் இம்முயற்சி கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது.
2. இதற்கு முன் மைசூரில் கடந்த ஆண்டு 55,524 போர் யோகா செய்ததே உலக சாதனையாக இருந்தது

68. அசாம் மாநில அரசுடன் இணைந்து எந்த நிறுவனம் அசாமில் புற்றுநோய் மருத்துவமனை உட்பட 19 மருத்துவமனைகளை நிறுவ ஒப்பந்தம் செய்துள்ளது?

**விடை: டாடா அறக்கட்டளை**

**விளக்கம்:**

1. இதேபோல் அருணாச்சலப்பிரதேசத்திலும் டாடா அறக்கட்டளை அம்மாநில முதல்வரின் கோரிக்கையை ஏற்று 2 புற்றுநோய் மருத்துவமனைகள் அமைக்கவும் ஒப்பந்தம் செய்துள்ளது.

69. ஆடர்லி முறையை ஒழிக்க முடிவு செய்துள்ள மாநிலம் எது?

**விடை: கேரளா**

**விளக்கம்:**

1. ஆடர்லி முறை என்பது உயர் அதிகாரிகளின் வீடுகளில் தனிப்பட்ட உதவிகளை புரிவதற்காக இளநிலை காவலர்களை ஈடுபடுத்தும் முறையாகும்.

70. இந்தியாவில் எங்கு செயற்கை மழை பொழிவிப்பதற்கான சோதனை முறையை இந்தியா வானிலை ஆராய்ச்சி கல்வி நிறுவனம் (புனே) மேற்கொள்ளவுள்ளது?

**விடை: சோலப்பூர் மாவட்டம் (மகாராஷ்டிரா)**

**விளக்கம்:**

1. மத்திய புவி அறிவியல் அமைச்சகத்தின் சார்பில் இந்த செயற்கை மழை திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

2. மேகக்கூட்டத்தில் சோடியம் குளோரைடு அல்லது கால்சியம் குளோரைடு உள்ளிட்ட வேதிப்பொருட்களை நிரப்பும் போது செயற்கை மழையை உருவாக்க முடியும்.

71. ஆயுஸ்மான் திட்டம் எப்போது பாரத பிரதமரால் துவங்கி வைக்கப்பட உள்ளது?

**விடை: ஆகஸ்டு 15, 2018**

**விளக்கம்:**

1. ஆயுஸ்மான் பாரத் திட்டம் என்பது 10 கோடி குடும்பங்களுக்கு ஆண்டுக்கு தலா 5 லட்சம் வரை மருத்துவ காப்பீடு வழங்கும் திட்டமாகும்.
2. இத்திட்டத்திற்கு இமாச்சலப்பிரதேசம், ஹரியானா, ஜம்மு – காஷ்மீர், உத்தரகாண்ட் உள்ளிட்ட 8 மாநிலங்களும்?
3. சண்டிகர் உள்ளிட்ட 4 யூனியன் பிரதேசங்களும் மத்திய அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

72. “i-Hariyali” என்ற செயலியை உருவாக்கிய மாநிலம் எது?

**விடை: பஞ்சாப்**

**விளக்கம்:**

1. இதன் மூலம் அரசு நர்சரிகளிலிருந்து இலவசமாக மரக்கன்றுகளை ஆடரின் பேரில் பெற இயலும்.

73. “YO1 Nature Cure Center” என்ற மையத்தை துவங்கி வைத்தவர் யார்?

**விடை: பிரதமர் நரேந்திர மோடி**

**விளக்கம்:**

1. 4வது சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு இந்த மையத்தை நியூயார்க்கில் உள்ள கேட்ஸ்கில்ஸ் (Catskills) பகுதியில் வீடியோ லிங்க் மூலம் பிரதமர் மோடி துவங்கி வைத்தார்.

74. இந்தியா எந்த நாட்டில் போர் நினைவுச் சின்னத்தை அமைக்க உள்ளது?

**விடை: பிரான்ஸ்**

**விளக்கம்:**

1. பிரான்ஸ் தலைநகரான பாரீஸிலிருந்து 200 கி.மீ தொலைவிலுள்ள வில்லர்ஸ் க்யூஸ்லெயின் (Villers Guislain) என்ற இடத்தில் முதல் உலகப் போரில் இறந்தவர்களின் நினைவாக "போர் நினைவுச்சின்னத்தை" கட்ட உள்ளதாக இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்தார்.

75. உலகின் முதல் சர்வதேச மனிதாபிமான தடயவியல் மையம் (ICHF – International Centre for Humanitarian Forensics) எங்கு அமைய உள்ளது?

**விடை: குஜராத்**

**விளக்கம்:**

1. இது குஜராத் தடயவியல் அறிவியல் பல்கலைக்கழகத்தில் (GFSU – Gujarat Forensic Sciences University) அமைய உள்ளது.

76. 3வது AIIB (Asian Infrastructure Investment Bbank)-ன் ஆண்டுக் கூட்டம் 2018-யை துவங்கி வைத்தவர் யார்?

**விடை: பிரதமர் நரேந்திர மோடி**

**விளக்கம்:**

1. ஜூன் 25 மற்றும் 26ம் தேதிகளில் நடைபெறும் இக்கூட்டம் மும்பையில் நடைபெற்று வருகிறது.
2. இதன் கருத்து : "Mobilizing Finance for Infrastructure Innovation and Collaboration".

77. குறைந்த விலையில் மருந்து வழங்கும் மத்திய அரசின் திட்டம் எது?

**விடை: பிரதான் மந்திரி பாரதீய ஜன் ஔஷதி யோஜனா கேந்திரா**

WeShine Academy TM

**விளக்கம்:**

1. இந்த திட்டம் 2015ல் குறைந்த விலையில் அத்தியாவசிய மருந்துகளை மக்களுக்கு வழங்கும் நோக்கத்தில் மத்திய அரசால் தொடங்கப்பட்டது.

78. ஜூலை 1ம் தேதியை எந்த தினமாக கொண்டாட முடிவு செய்துள்ளது?

**விடை: ஜி.எஸ்.டி தினம்**

**விளக்கம்:**

1. ஜூலை 1, 2018-யுடன் ஜி.எஸ்.டி அமல்படுத்தப்பட்டு ஓராண்டு நிறைவடைகிறது.
2. சுதந்திர இந்திய வரலாற்றில் மிகப்பெரிய வரி சீர்திருத்தமாக கருதப்படும் ஜி.எஸ்.டி 2017 ஜூன் 30ல் அப்போதைய குடியரசுத்தலைவர் பிரணாப்முகர்ஜி மற்றும் பாரத பிரதமரால் தொடங்கி வைக்கப்பட்டது.
3. ‘‘ஒரே நாடு ஒரே வரி’’ என்ற கொள்கையின் அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் இதற்கு முன் இருந்த 12க்கும் மேற்பட்ட வரிகள் முடிவுக்கு வந்தன

79. இணையவழி தாக்குதல் (Cyber Attacks) அதிகம் உள்ள நாடுகளின் பட்டியலில் இந்தியா எத்தனையாவது இடத்தில் உள்ளது?

**விடை: 4**

**விளக்கம்:**

1. வலைத்தள தாக்குதல் (Web appoication Attack) அதிகம் உள்ள நாடுகளின் பட்டியலில் இந்தியா 8வது இடத்தையும் பெற்றுள்ளது.
2. இப்பட்டியலில் ரஷ்யா, சீனா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகள் முதல் மூன்று இடத்தை பிடித்துள்ளன.

80. பல்கலைக்கழக மானிய குழுவை (UGC – University Grants Commission) கலைத்து விட்டு எந்த ஆணையத்தை உருவாக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது?

We Shine Academy™

**விடை: இந்திய உயர்கல்வி ஆணையம்**

**விளக்கம்:**

1. இது மத்திய மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும்
2. இது 1956-ல் அபுல்கலாம் ஆசாதத் என்பவரால் தொடங்கப்பட்டது.
3. இதன் தற்போதைய தலைவர் - டி.பி.சிங்
4. இதன் தலைமையகம் புதுடெல்லியில் உள்ளது.

81. இந்தியாவின் முதல் புல்லட் ரயில் திட்டம் எந்த இருநகரங்களுக்கு இடையே அமைக்கப்படுகறது?

**விடை: மும்பை – அகமதாபாத்**

**விளக்கம்:**

1. இத்திட்டம் 2017 செப்டம்பர் மாதத்தில் தொடங்கப்பட்டது.
2. ஜப்பான் நிதியுதவியுடன் தொடங்கப்படும் இத்திட்டத்தின் மொத்த தொலைவு 508 கிலோமீட்டர் ஆகும்.

82. இந்தியாவின் எந்த கிராம பஞ்சாயத்து "No Toilet, No Bride" என்ற தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது?

**விடை: கோதிகன் (ஹரியானா)**

**விளக்கம்:**

1. கிராமத்தில் உள்ள பெண்களின் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வை உறுதிசெய்யும் வகையில் கோதிகன் கிராம பஞ்சாயத்து இத்தீர்மானத்தை கொண்டுள்ளது.

2. இந்த நடவடிக்கையின் மூலம் கழிப்பறை வசதி கொண்ட குடும்பங்களுக்கு மட்டுமே தங்களின் பெண்களை திருமணம் செய்து கொடுக்கும் நாட்டின் முதல் பஞ்சாயத்துக்காக கோதிகன் பஞ்சாயத்து மாறியுள்ளது.

3. கோதிகன் பஞ்சாயத்து திறந்தவெளி மலம்கழித்தல் அற்ற பஞ்சாயத்து என ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

83. நாட்டில் உள்ள மெட்ரோ ரயில்களுக்கான தர நிலைகளை வகுக்க மத்திய அரசு எந்தக் குழுவை அமைக்க உள்ளது?

**விடை: ஸ்ரீதரன் குழு**

**விளக்கம்:**

1. மெட்ரோ மனிதர் என்று அழைக்கப்படும் ஸ்ரீதரன் தலைமையில் அமைய உள்ள இக்குழு மெட்ரோ ரயில் அமைப்புகளின் கட்டுமானம் மற்றும் செயல்பாட்டு செலவினங்களை குறைத்தல், மெட்ரோ பாகங்களை உள்நாட்டிலேயே தயாரித்தல் ஆகியவற்றிற்க்கான வழிமுறைகளை இக்குழு அளிக்க உள்ளது.

2. இவர் 1995 முதல் 2012ம் ஆண்டு வரை டெல்லி மெட்ரோ நிர்வாகத்தின் மேலாண் இயக்குநராக பதவி வகித்தார்.

84. நிலத்தடி நீர் குறைவை தடுப்பதற்காக 'Panni Bacho, Paise Kamao' என்ற புதிய திட்டத்தை தொடங்கியுள்ள மாநில அரசு எது?

**விடை: பஞ்சாப்**

**விளக்கம்:**

1. 'நீரை சேமிக்கவும், பணத்தை சம்பாதிக்கவும்' ('Panni Bacho, Paise Kamao') என்ற திட்டத்தின் படி நிலத்தடி நீரை குறைவாகப் பயன்படுத்தும் விவசாயிகளுக்கு நிதி வழங்கப்படும் என அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

2. ஆற்றல் பயன்பாடு குறித்தும், வங்கி கணக்குக்கு மாற்றப்பட்ட பணம் குறித்த அனைத்து தகவல்களும் அலைபேசி வாயிலாக விவசாயிகளுக்கு தெரிவிக்கப்படும் எனவும் அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

# உலக நிகழ்வுகள்

1. சூர்யகிரண் ராணுவப்பயிற்சி இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையே தொடங்கியுள்ளது?

**விடை: நேபாளம்**

**விளக்கம்:**

1. இந்த ஆண்டு இப்பயிற்சி உத்ரகாண்டில் உள்ள பிதோரகரில் நடைபெறுகிறது.
2. இது இந்தியாவுக்கும் நேபாளத்திற்கும் இடையிலான 13வது பயிற்சியாகும். இப்பயிற்சி மே 30ல் தொடங்கி ஜூன் 12 வரை நடைபெற உள்ளது.
3. இது 6 மாதத்திற்கு ஒரு முறை இந்தியா மற்றும் நேபாளத்தில் முறையே மாறி மாறி நடைபெறும்.
4. தலைநகர்: காத்மண்ட்
5. நாணயம் : நேபாள ரூபாய்
6. அதிபர் : வித்யா தேவி பண்டாரி
7. பிரதமர் : காட்கா பிரசாத் ஒலி

2. ஐ.நா. அமைதி படை (United Nations Peacekeeping Force)-க்கு அதிக வீரர்களை அனுப்பும் நாடுகளின் பட்டியலில் இந்தியா எத்தனையாவது இடத்தில் உள்ளது?

**விடை: 3**

**விளக்கம்:**

1. இது ஐ.நா. உருவான ஆண்டான 1945-லேயே உருவாக்கப்பட்டது.
2. ஐ.நா. அமைதி படையில் உயிர் தியாகம் செய்வோரின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

3. சிங்கப்பூர் பாதுகாப்பு துறை கூட்டத்தில் உரையாற்றும் முதல் இந்திய பிரதமர் யார்?

**விடை: நரேந்திர மோடி**

**விளக்கம்:**

1. இதேபோல் சிங்கப்பூரில் உள்ள கிளி∴போர்டு படகுதுறையில் காந்தியின் அஸ்தி கரைக்கப்பட்ட இடத்தில் கல்வெட்டையும் திறந்து வைக்க உள்ளார்.
2. 1948 ஜனவரி 30ல் காந்தியடிகள் காலமானார். மகாத்மா காந்தியின் அஸ்தி உலகம் முழுவதும் கரைப்பதற்காக அனுப்பி வைக்கப்பட்டது.
3. தலைமையிடம் : சிங்கப்பூர்
4. நாணயம் : சிங்கப்பூர் வெள்ளி
5. அதிபர் : அலிமா யாகோப்பு
6. பிரதமர் : லீ ஹசியன் லோங்

4. கருகலைப்பு தடை சட்டத்தை அண்மையில் வாக்கெடுப்பு மூலமாக நீக்கிய நாடு எது?

**விடை: அயர்லாந்து**

**விளக்கம்:**

1. தலைநகரம் : டப்லின்
2. அதிபர் : மைக்கல் டேனியல் ஹிக்கின்ஸ்
3. பிரதமர் : லியோ வரத்கர்
4. நாணயம் : யூரோ

5. ஸ்பெயினின் பிரதமர் பதவியிலிருந்து அண்மையில் நீக்கப்பட்டவர் யார்?

**விடை: மரியானா ரஜோய்**

**விளக்கம்:**

1. ஸ்பெயின் நாட்டின் நவீன ஜனநாயகத்தில் முதன்மை தலைவராக பதவி வகித்த இவர் ஊழலில் சிக்கியதால் நம்பிக்கையில்லா தீர்மானம் மூலம் வெளியேற்றப்பட்டார்.

2. இதனால் எதிர்க்கட்சியான சோசலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பெட்ரோ சான்செஸ் (Pedero Sanchez) பிரமராக பதவி ஏற்க உள்ளார்.

6. US Pacific Command என்னவென்று பெயர் மாற்றப்பட்டுள்ளது?

**விடை: US Indo – Pacific Command**

**விளக்கம்:**

1. இதன்மூலம் அமெரிக்க ராணுவத்திற்கு இந்தியாவின் முக்கியத்துவம் அடையாளம் காணப்பட்டது.
2. PACOM என்று அழைக்கப்படும் US Pacific Command இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட அமைப்பாகும்.

7. மேற்கு வங்கத்தின் சாந்தி நிகேதனிலுள்ள தாகூரின் விஸ்வபாரதி கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டவர் யார்?

**விடை: ஷேக் ஹசினா (வங்கதேச பிரதமர்)**

**விளக்கம்:**

1. இப்பட்டமளிப்பு விழாவில் பாரத பிரதமர் நரேந்திர மோடி, மேற்கு வங்க, முதல்வர் மம்தா பானர்ஜி, ஆளுநர் திரிபாதி ஆகியோரும் கலந்து கொண்டனர்.
2. இப்பல்கலைக்கழக வளாகத்தில் இந்தியா – வங்கதேச நட்புறவின் நினைவாக கட்டப்பட்ட வங்கதேச இல்லத்தையும் திறந்து வைத்தனர்.
3. இப்பல்கலைக்கழகம் 2021ல் நூற்றாண்டு விழாவை கொண்டாட உள்ளது.
4. பிரதமர் : ஷேக் ஹசீனா
5. தலைநகர்: டாக்கா
6. நாணயம் : வங்காளதேச இட்டாக்கா
7. அதிபர் : அப்துல் ஹமீது

8. இணையவழி குற்றங்கள் அதிகமுள்ள நாடுகளில் முதலிடத்திலுள்ள நாடு எது?

**விடை: கனடா**

**விளக்கம்:**

1. இணையதள தகவல் திருட்டு, இணையதளத்தின் மூலம் கணினி, செல்போன்களில் வைரஸ் பரவுவது, இணைவழி நிதி மோசடி உள்ளிட்டவற்றின் அடிப்படையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.
2. இப்பட்டியலில் அமெரிக்கா இரண்டாமிடமும், இந்தியா மூன்றாம் இடமும் பிடித்துள்ளன.
3. ஸ்மார்ட் போன்களில் இணைதளத்தை பயன்படுத்தி தகவல், நிதி இழப்பைச் சந்திக்கும் நாடுகளில் பட்டியலில் அமெரிக்கா, ரஷ்யா, இந்தியா ஆகிய நாடுகள் முதல் மூன்று இடங்களை பிடித்துள்ளன.
4. தலைநகரம் : ஓட்டாவா
5. பிரதமர் : ஜஸ்டின் ட்ருதியே
6. நாணயம் : டாலர்

9. பொது இடங்களில் முஸ்லீம் பெண்கள் முழு முகத்தையும் மறைக்கும் வகையில பர்தா அணிந்துவர தடை விதித்துள்ள நாடு எது?

**விடை: டென்மார்க்**

**விளக்கம்:**

1. தலைநகரம் : கோபனாவன்
2. பிரதமர் : லார்ஸ் லொகெ ராஸ் முசென்
3. நாணயம் : டானிய குரோன்

10. எந்தப் பகுதியில் இந்தியக் கலைஞர்கள் தங்களது கைவினைப் பொருட்களை காட்சிப்படுத்தும் வகையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நிரந்த இடத்தை திறந்து வைக்கிறார்?

**விடை: லிட்டில் இந்தியா (சிங்கப்பூர்)**

**விளக்கம்:**

1. லிட்டில் இந்தியா பகுதி என்பது குறுகிய கால பயணமாக இந்தியர்கள் வந்து வசிக்கும் பகுதியாகும்.

2. தலைமையிடம் : சிங்கப்பூர்
3. நாணயம் : சிங்கப்பூர் வெள்ளி
4. அதிபர் : அலிமா யாகோப்பு
5. பிரதமர் : லீ ஹசியன் லோங்

11. நியூசிலாந்திலன் பசுக்களிடையே பரவி வரும் நோயின் பெயர் என்ன?

**விடை: மைக்கோ பிளாஸ்மா**

**விளக்கம்:**

1. இது ஒரு வகையான பாக்டீரியா நோயாகும். இதனால் பாதிக்கப்பட்ட பசுக்களை கொல்ல அந்நாட்டு அரசு திட்டமிட்டுள்ளது.
2. தலைநகர் : வெலிங்டன்
3. பிரதமர் : ஜாஸிண்டா அதெர்ன்
4. நாணயம் : நியூஸிலாந்து டாலர்

12. BRICS வெளியுறவுத்துறை அமைச்சர்களின் கூட்டம் எப்போது நடைபெற்றது?

**விடை: ஜுன் 4**

**விளக்கம்:**

1. தென்ஆப்பிரிக்கா நாட்டின் பிரிட்டோரியா நகரில் நடைபெற்ற இக்கூட்டத்தில இந்திய வெளியுறவுத்துறை அமைச்சரான சுஸ்மா சுவராஜ் கலந்து கொண்டார்.
2. இதேபோல இப்ஸா (IBSA) நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களின் கூட்டமும் இங்கு நடைபெற்றது.
3. இதில் IBSA என்பது
4. I – India
5. B – Brazil
6. SA – South Africa

13. அமெரிக்கா ராணுவப்படைகளில் ஒன்றான பசுபிக் பிராந்திய பாதுகாப்பு படையின் பெயர் எவ்வாறு மாற்றப்பட்டுள்ளது?

**விடை: இந்திய பசுபிக் படை**

**விளக்கம்:**

1. ஆசியா பசுபிக் நாடுகள் இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த ஷாங்கிரி – லா பேச்சுவார்த்தை சிங்கப்பூரில் நடைபெற்றது.
2. இந்தியாவின் பாதுகாப்பு ஆலோசகர் - அஜித் தோவல்

14. ர.ஃபேல் ரக போர் விமானம் வாங்க இந்தியா எந்த நாட்டுடன் ஒப்பந்தம் செய்துள்ளது?

**விடை: பிரான்ஸ்**

**விளக்கம்:**

1. 36 ர.ஃபேல் ரக போர்விமானம் வாங்க 2016 செப்டம்பரில் ஒப்பந்தம் செய்யப்பட்டது.
2. 2019 செப்படம்பர் முதல் இவ்வகையான விமானங்களை இந்தியாவிற்கு பிரான்ஸ் வழங்க உள்ளது.
3. தலைநகரம் : பாரிஸ்
4. நாணயம் : யூரோ
5. பிரதமர் : எட்வர்டு பிலிப்
6. அதிபர் : இம்மானுவேல் மேக்ரோன்

15. இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையிலான உறவு 25 ஆண்டை எட்டியுள்ளது?

**விடை: தென்ஆப்பிரிக்கா**

We Shine Academy™

**விளக்கம்:**

1. இதேபோல் மகாத்மா காந்திப ீட்டர்மாரிட் ஸ்பர்க் ரயில் நிலையத்தில் இரயிலில் இருந்து (இனவெறி காரணமாக) இறக்கி விடப்பட்டதன் 125வது ஆண்டு, இந்த ஆண்டு ஆகும்.

2. இந்த ஆண்டு நெல்சன் மண்டேலாவின் 100-வது பிறந்த ஆண்டு ஆகும்.

16. அஞ்சல் துறையில், இந்தியா எந்த நாட்டுடன் இணைந்து கூட்டு முத்திரை (Joint Stamps) வெளியிட உள்ளது?

**விடை: ரஷ்யா**

**விளக்கம்:**

1. இந்திய அஞ்சல் துறை, ரஷ்யாவின் அஞ்சல் துறையான ஆயுசுமுயு உடன் இணைந்து கூட்டு முத்திரை வெளியிட ஒப்பந்தம் கையெழுத்திட்டுள்ளது.
2. இதன் மூலம் இந்தியா மற்றும் ரஷ்யா இடையிலான உறவு பலப்படுகிறது
3. தலைநகர்: மாஸ்கோ
4. அதிபர் : விளாடிமிர் புதின்
5. பிரதமர் : திமித்ரி மெட்வெடெவ்
6. நாணயம் : ரஷ்ய ரூபிள்

17. 44வது G7 மாநாடு எங்கு நடைபெற்றது?

**விடை: கனடா**

**விளக்கம்:**

1. கடந்த ஜுன் 8-9 தேதிகளில் கியூபெக் நகரில் உள்ள லா மல்பெய் என்ற இடத்தில் இம்மாநாடு நடைபெற்றது.

2. G7 நாடுக்ள: கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், ஐக்கிய இராஜ்ஜியம் (UK) மற்றும் ஐக்கிய மாகாணங்கள் (US)

3. கடந்த மார்ச்ச 2014 ம் ஆண்டிற்கு முன் வரை இந்த அமைப்பில் ரஷ்யாவும் ஒரு உறுப்பினராக இருந்து இக்கூட்டமைப்பு G8 என அறியப்பட்டது குறிப்பிடத்தக்கது.
4. தலைநகரம் : ஒட்டாவா
5. பிரதமர் : ஜஸ்டின் ட்ருதியே
6. நாணயம் : டாலர்

18. ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் அடுத்த 2 ஆண்டுகளுக்கான 5 உறுப்பு நாடுகளாக தேர்ந்தெடுக்கப்பட்டவை எவை?

**விடை: டொமினியன் குடியரசு மற்றும் இந்தோனேஷியா**

**விளக்கம்:**

1. நெதர்லாந்து, சுவீடன், எத்தியோபியா, பொலிவியா மற்றும் கஜகஸ்தான் ஆகிய நாடுகளின் பதவிக்காலம் 2018 டிசம்பர் 31 அன்று முடிவடைகிறது.
2. இதனால் 5 புதிய உறுப்பு நாடுகளை ஐ.நா. பொதுச்சபை தேர்வு செய்தது.
3. இதன்மூலம் புதிய 5 நாடுகளும் ஜனவரி 1, 2019 முதல் 2 ஆண்டுகளுக்கு ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலில் இடம்பெறும்.

19. ஐ.நா.வின் வளர்ச்சி திட்டத்தில் சீர்திருத்தங்கள் கொண்டு வர எத்தனை நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன?

**விடை: 193**

**விளக்கம்:**

1. இதன் நோக்கம் - வறுமை ஒழிப்பு
2. இதன் இறுதி லட்சியம் - மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துதல்
3. 2030-ஆண்டிற்கான நிலையான வளர்ச்சி கொள்கையை பிரதிபலிக்கும் வகையில் இது அமைந்துள்ளது.

20. அமெரிக்கா அதிபர் டொனால்டு டிராம்ப் மற்றும் வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் இடையிலான வரலாற்று சிறப்பு மிக்க சந்திப்பு எங்கு நடைபெற்றது?

**விடை: சென்ஸோட்டா தீவு (சிங்கப்பூர்)**

**விளக்கம்:**

1. ஜுன் 12ல் நடைபெற்ற இச்சசந்திப்பில் இரு தலைவர்களும் நான்கு அம்ச திட்டங்களை செயல்படுத்த சம்மதித்துள்ளனர்.
2. அமெரிக்கா வடகொரிய இடையே புதிய நட்புறவை ஏற்படுத்துதல்.
3. கொரிய தீபகற்பத்தில் நிரந்தர அமைதி, மற்றும் ஸ்திரத்தன்மை ஏற்படுத்தவும், ஏப்ரல் 27ல் வெளியிடப்பட்ட வட-தென்கொரிய மாநாட்டு தீர்மானத்தின் அடிப்படையில் கொரிய தீபகற்பத்தை அணுஆயுதமற்ற பிரதேசமாக்குதல் போர் கைதிகளை பரிமாறி கொள்ளுதல்.

- தலைமையிடம் : சிங்கப்பூர்
- நாணயம் : சிங்கப்பூர் வெள்ளி
- அதிபர் : அலிமா யாகோப்பு
- பிரதமர் : லீ ஹசியன் லோங்

21. ஜுன் 21ல் சர்வதேச யோகா தினம் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு இந்திய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்கள் யோகா தினத்தை எங்கு கொண்டாட உள்ளார்?

**விடை: சுரிநாம் (லத்தீன் அமெரிக்கா நாடு)**

**விளக்கம்:**

1. 7 நாள் அரசு முறை பயணமாக கிரீஸ், கியூபா மற்றும் சுரிநாம் ஆகிய நாடுகளுக்கு இந்திய குடியரசுத் தலைவர் செல்கிறார்.

2. இப்பயணத்தின் போது நான்காவது யோகா தினத்தை சுரிநாம் நாட்டில் கொண்டாடுகிறார்.

3. தலைநகரம் : பரமாரியோ

4. அதிபர் : டெஸி பாட்டர்ஸ்

5. நாணயம் : டாலர்

22. உலக சுகாதார அமைப்பானது, அண்மையில் நேபாளத்தை எந்நோயை முற்றிலும் ஒழித்த நாடு என்று உறுதிப்படுத்தியது?

**விடை: கண்ணிமை அழற்சி**

**விளக்கம்:**

1. இதன் மூலம் உலகின் முதன்மை தொற்றுநோயான கண்ணிமை அழற்சி நோயை முற்றிலும் ஒழித்த தென்கிழக்கு ஆசியாவின் முதல் நாடு என்ற பெருமையை நேபாளம் பெற்றுள்ளது.
2. தலைநகர்: காத்மண்ட்
3. நாணயம் : நேபாள ரூபாய்
4. அதிபர் : வித்யா தேவி பண்டாரி
5. பிரதமர் : காட்கா பிரசாத் ஒலி

23. அமெரிக்கா அதிபர் டொனால்டு டிரம்ப் மற்றும் வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் இடையிலான வரலாற்று சிறப்பு மிக்க சந்திப்பின் செலவுகளை ஏற்ற அமைப்பு எது?

**விடை: சர்வதேச அணு ஆயுத மறுப்பு அமைப்பு**

**விளக்கம்:**

1. அணு ஆயுத ஒழிப்பிற்காக நடைபெற்ற இப்பேச்சுவார்த்தைக்கான செலவுகளை நோபல் பரிசு பெற்ற சர்வதேச அணு ஆனுத மறுப்பு அமைப்பு ஏற்றுக்கொண்டது.
2. இப்பேச்சுவார்த்தை ஜூன் 12ல் சென்ஸோட்டா தீவு (சிங்கப்பூர்)-ல் நடைபெற்றது.

We Shine Academy TM

24. ஆண்டுதோறும் கொல்லப்படும் பத்திரிக்கையாளர்களை கௌரவித்து வரும் அமெரிக்காவின் அருங்காட்சியகம் எது?

**விடை: நியூசியம்**

**விளக்கம்:**

1. அமெரிக்காவின் தலைநகரான வாஷிங்கடன் நகரில் உள்ள இந்த அருங்காட்சியகத்தல் இந்தியாவை சார்ந்த கௌரி லங்கேஷ் மற்றும் சுதிப்தத்தா பௌமிக் உள்ளிட்டோர் இடம்பிடித்துள்ளனர்.
2. அதிபர் : டொனால்டு டிரம்ப்
3. நாணயம் : டாலர்

25. எந்த நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பாலிஸ்டர் நூழிலைகள் மீது பொருள் குவிப்பு தடுப்பு வரியை விதிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது?

**விடை: சீனா**

**விளக்கம்:**

1. தலைநகரம் : பெய்ஜிங்
2. அதிபர் : ஜீ ஜின்பிங் (சீனா கம்யூனிஸ்ட் கட்சி)
3. பிரதமர் : லி கிகாங்
4. நாணயம் : ரென்மின்பி

26. கஞ்சா விற்பனையை சட்டப்பூர்வமாக்கிய நாடு எது?

**விடை: கனடா**

**விளக்கம்:**

1. G7 நாடுகளில் கஞ்சா பயிரிட்டு பயன்படுத்தவும், விற்கவும் அனுமதியளித்த முதல் நாடு கனடா ஆகும்.
2. இது கனடாவின் தேசிய தினமான ஜூலை 1 முதல் அமல்படுத்தப்பட உள்ளது.
3. ஏற்கெனவே உருகுவே மற்றும் அமெரிக்காவின் ஐந்து மாகாணங்கள் கஞ்சா விற்பனைக்கு சட்டபூர்வ அங்கீகாரம் வழங்கியுள்ளது.

4. தலைநகரம் : ஒட்டாவா
5. பிரதமர் : ஜஸ்டின் ட்ருதியே
6. நாணயம் : டாலர்

27. சர்வதேச தகவல் தொடர்பு தொழில்நுட்ப (ICT) மாநாடு 2018 எங்கு நடைபெற உள்ளது?

**விடை: காத்மண்ட் (நேபாளம்)**

**விளக்கம்:**

1. **ICT – Information and Communication Technology**
2. வரும் ஜுன் 17 மற்றும் 18 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற உள்ள இந்த மாநாட்டில் சீனா, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அறிஞர்கள் பங்கேற்க உள்ளனர்.

28. 11வது சர்வதேச ஹிந்தி மாநாடு (World Hindi Conference) எங்கு நடைபெற உள்ளது?

**விடை: மொரீஷியஸ்**

**விளக்கம்:**

1. வரும் ஆகஸ்ட் 18 முதல் 20 வரை நடைபெற உள்ளது.
2. இதன் கருத்து : ஹிந்தி உலகம் மற்றும் இந்திய கலாச்சாரம் (Hindi Vishwa Aur Bharatiy Sanskriti)
3. முதல் சர்வதேச ஹிந்தி மாநாடு 1975ல் நாக்பூரில் நடந்தது குறிப்பிடத்தக்கது.

29. சீனா – பாகிஸ்தான் கூட்டு தயாரிப்பில் உருவாகும் வர்த்தக வழித்தடம் குறித்த திரைப்படத்தின் பெயர் என்ன?

**விடை: தி ஜர்னி (The Journey)**

**விளக்கம்:**

1. 5,000 கோடி டாலர் மதிப்பிலான சீனா – பாகிஸ்தான் வர்த்தக வழித்தட திட்டம், சீன அதிபர் ஷி ஜின்பிங்கின் கனவு திட்டமாகும்.
2. இத்திட்டத்தைப் பற்றியும், சீனாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நிலவி வரும் ஆழமான நட்புரவு குறித்தும் இந்தத் திரைப்படம் விவரிக்கும் என திரைக்கதை எழுதிய ஹைபிங் கூறியுள்ளார்.
3. இந்த வழித்தட திட்டம், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு பகுதியான காஷ்மீர் வழியாக செல்வதால் இதற்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது.

30. பேறுகால விடுப்பில் ஆண்களுக்கு சலுகை காட்டாத நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் இடம் பெற்றுள்ளது என்று கூறிய அமைப்பு எது?

**விடை: UNICEF**

**விளக்கம்:**

1. UNICEF – United Nations International Children's Emergency Fund (ஐக்கிய நாடுகளின் சிறுவர்கள் நிதியம்)
2. பேறுகால விடுப்பு வழங்கும் நடைமுறை பிரேசில் மற்றும் காங்கோ ஆகிய நாடுகளில் நடைமுறையில் உள்ளது.
3. மத்திய அரசு ஆண்களுக்கும் மூன்று மாதம் ஊதியத்துடன் பேறுகால விடுப்பு வழங்கும் மசோதாவை அடுத்த நாடாளுமன்ற கூட்டுத்தொரில் தாக்கல் செய்ய உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
4. அண்மையில் ஹரியான மாநில அரசு ஆண்களுக்கு 15 நாள் ஊதியத்துடன் கூடிய பேறுகால விடுப்பு வழங்குவதாக அறிவித்துள்ளது.

31. சாதனைகளை முறியடிக்கும் விண்வெளி வீரரான பெக்கி விட்சன் நாசாவிலிருந்து எப்போது ஓய்வு பெற்றார்?

**விடை: ஜூன் 15**

**விளக்கம்:**

1. 58 வயதாகும் இவர், அமெரிக்க விண்வெளி வீரர்களிலேயே அதிகநேரம் விண்வெளியில் செலவிட்டவர் என்ற பெருமைக்குரியவர் ஆவார்.
2. இவர் 1985-ல் ரைஸ் பல்கலைக்கழகத்தில் உயிரி வேதியியல் (biochemistry) பிரிவில் டாக்டர் பட்டம் பெற்றார்.

32. NSG-ன்; 28வது கூட்டம் எங்கு நடைபெற்றது?

**விடை: ஜர்மாலா (Jurmala)**

**விளக்கம்:**

1. **NSG – Nuclear Suppliers Group**
2. லாட்வியா (Latvia) நாட்டில் ஜுன் 14 மற்றும் 15ம் தேதிகளில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கியவர் லாட்வியாவின் தூதர் ஜானிஸ் ஸ்லமேட்ஸ் (Janis Zlamets) ஆவார்.
3. இதில் அணுசக்தி தொடர்பான பல்வேறு கருத்துக்கள் கலந்தாலோசிக்கப்பட்டன.

33. கொலம்பியாவின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?

**விடை: இவன் டூக்யூ (Ivan Duque)**

**விளக்கம்:**

1. இவர் வரும் ஆகஸ்ட் 7 முதல் அதிபராக நியமிக்கப்பட உள்ளார்.

34. "Greece – Indian Business Forum" எங்கு நடைபெற்றது?

**விடை: ஏதன்ஸ்**

**விளக்கம்:**

1. கிரீஸ் மற்றும் இந்தியா இடையிலான தொழில் முறைமைகளை மேம்படுத்தும் வகையில் ஜுன் 19ம் தேதி இந்த கூட்டம் ஏதன்ஸில் நடைபெற்றது.
2. இதில் இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த பங்காற்றினார்.

We Shine Academy ™

35. OPEC-ன் 7வது சர்வதேச கருத்தரங்கம் எங்கு நடைபெறுகிறது?

**விடை: ஆஸ்ட்ரியா**

**விளக்கம்:**

1. ஆஸ்ட்ரிய நாட்டின் வியன்னாவிலுள்ள இம்பீரியல் ஹாப்ஸ்பர்க் அரண்மனையில் (Imperial Hofburg Palace) ஜுன் 20 மற்றும் 21 தேதிகளில் நடைபெற்று வருகிறது.
2. இதன் கருத்து : "Petroleum – Cooperation for a Sustainable Future"
3. opec-The organization of the Petroleum Exporting Countries

36. மேசிடோனியா நாட்டின் பெயரை என்னவாக மாற்ற அந்நாட்டு நாடாளுமன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது?

**விடை: வடக்கு மாசிடோனியா**

**விளக்கம்**

1. இந்நாடு 1991-ல் யூகோஸ்லாவிலிருந்து பிரிந்து தனி நாடானது.
2. மேசிடோனியா என்ற பெயரை பயன்படுத்துவதற்கு கிரிஸ் நாடு எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து இம்முடிவு மேற்கொள்ளப்பட்டது.

37. ஐ.நா மனித உரிமைகள் கவுன்சிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ள நாடு எது?

**விடை: அமெரிக்கா**

**விளக்கம்:**

1. இஸ்ரேலுக்கு எதிராக இந்த ஆணையம் தொடர் விரோத போக்குடன் செயல்பட்டு வருவதாக அமெரிக்கா தெரிவித்து இம்முடிவை அறிவித்துள்ளது.

38. எந்த நாட்டில் 49 கிராமங்களுக்கு சூரிய மின்சக்தி வசதி ஏற்படுத்த இந்தியாநிதி உதவி அளிக்கும் என குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்கள் அறிவித்துள்ளார்?

**விடை: சுரிநாம்**

**விளக்கம்:**

1. லத்தீன் அமெரிக்கா நாடான சிநாமுக்கு பயணம் மேற்கொண்டுள்ள குடியரசுத் தலைவர் ரூ.347 கோடி நிதி உதவி வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.
2. தகவல் தொழில்நுட்பத்தில் நிபுணத்துவமையம் அமைக்கவும் ஒப்பந்தம் செய்துள்ளார்.

39. எந்த நாடு ஐ.நா.வின் மனித உரிமை ஆணையத்தில (UNHRC) இருந்து விலகுவதாக அறிவித்தது?

**விடை: US**

**விளக்கம்:**

1. **UN HRC – United Nations Human Right Council**
2. **தலைமையகம்- ஜெனிவா (சுவிட்சர்லாந்த்)**
3. ஐ.நாவுக்கான அமெரிக்க தூதர் நிக்கி ஹேலி மற்றும் அமெரிக்க செயலாளர் மைக் பாம்பியோ இச்செய்தியினை தெரிவித்தனர்.

40. துஸ்பேனில் உள்ள இந்திய தூதரகத்தில் சுவாமி விவேகாந்தா கலாச்சார மையத்தை துவங்கி வைத்தவர் யார்?

**விடை: நிதின் கட்கரி**

**விளக்கம்:**

1. இவர் மத்திய நீர் வளத்துறை மற்றும் சாலை மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஆவார்.
2. தஜிகிஸ்தான் நாட்டின் தலைநகரான துஸ்பேனில் பேசிய இவர், ஈரானில் சபாஹர் துறைமுகத்தை (Chabahar Port) அமைத்து 2019-க்குள் செயல்படுத்த உள்ளதாக கூறினார்.

41. எந்த நாட்டில் பெண்கள் கார் ஓட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது?

**விடை: சவுதி அரேபியா**

**விளக்கம்:**

1. முஸ்லீம் நாடான இங்கு 30 ஆண்டுகளாக இருந்த தடை 2018 ஜூன் 23 நள்ளிரவு முதல் விலக்கிக் கொள்ளப்படுவதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

42. எங்கு சரக்குகளை கையாளும் முனையம் அமைக்க இந்தியா ஆதரவு தெரிவித்துள்ளது?

**விடை: அஸ்கபாத் நகர் (துர்க்மெனிஸ்தான்)**

**விளக்கம்:**

1. ஈரானில் உள்ள சாப்ஹர் துறைமுகத்தை மேம்படுத்தவும் இந்தியா திட்டமிட்டுள்து. சர்வதேச அளவில் போக்குவரத்து தொடர்பை அதிகரிக்கும் முயற்சியாக இந்தியா இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளது.
2. இதேபோல் ஈரானில் உள்ள சாப்ஹர் துறைமுகத்தை மேம்படுத்தவும் இந்தியா திட்டமிட்டுள்ளது.

43. ஐரோப்பிய யூனியனிலிருந்து வெளியேறும் மசோதாவிற்கு எந்த நாட்டு நாடாளுமன்றம் அண்மையில் ஒப்புதல் வழங்கியுள்ளது?

**விடை: பிரிட்டன்**

**விளக்கம்:**

1. “ஐரோப்பிய யூனியன் விலகல் மசோதா” என்று பெயரிடப்பட்டுள்ள இம்மசோதா சட்டமாக்கப்பட்டதால், ஐரோப்பிய யூனியனில் பிரிட்டன் இணைவதற்கு 1972-ல் இயற்றப்பட்ட “ஐரோப்பிய சமுதாய சட்டம்” செல்லாது என அறிவிக்கப்பட்டுள்ளது.
2. 28 நாடுகளை கொண்ட ஐரோப்பிய யூனியனில் 1973 முதல் பிரிட்டன் உறுப்பினராய் உள்ளது.

44. பயங்கரவாதத்துக்கு நிதி அளிப்பதை தடுக்க தவறும் நாடுகளுக்கு எதிரான சர்வதேச அமைப்பு எது?

**விடை: நிதிய குற்ற தடுப்பு பணி குழு**

**விளக்கம்:**

1. இந்த அமைப்பு G7 நாடுகளின் முயற்சியால் உருவாக்கப்பட்டது. இதன் மாநாடு பிரான்ஸ் தலைநகர் பாரீஸ்ஸில் நடைபெற்றது.
2. இந்த அமைப்பின் கருப்பு பட்டியலில் பாகிஸ்தான் சேர்க்கப்பட்டுள்ளது.

45. அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் மற்றும் ரஷ்யா அதிபர் விளாத்திமிர் புதின் இடையிலான சந்திப்பு எப்போது நடைபெற உள்ளது?

**விடை: ஜுலை 16**

**விளக்கம்:**

1. இச்சந்திப்பு பின்லாந்து தலைநகரான ஹெல்சிங்கில் நடைபெற உள்ளது.
2. இச்சந்திப்பில் இரு நாட்டு உறவுகள் குறித்தும் தேசிய பாதுகாப்பு குறித்தும் இரு அதிபர்களும் விவாதிப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

46. இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையே **"Coordinated Patrol (CORPAT)"** என்ற முதலாவது கடற்படை பயிற்சி நடைபெற்றது?

**விடை: வங்கதேசம்**

**விளக்கம்:**

1. ஜுன் 27 அன்று வங்ககடலில் இந்தியா மற்றும் வங்கதேச கடற்படைகள் கலந்து கொள்ளும் இப்பயிற்சியை இந்திய கடற்படை தலைமை தளபதி சுனில் லம்பா தொடங்கி வைத்தார்.

We Shine Academy™

# முக்கிய தினங்கள்

1. **உலக பால் தினம் (World Milk Day)** எப்போது கொண்டாடப்படுகிறது?

**விடை : ஜூன் 1**

**விளக்கம் :**

1. இந்த தினம் 2001 முதல் கொண்டாடப்பட்டு வருகிறது.

2. பால் மற்றும் பால்தொழிற்சாலையுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை விளம்பரப்படுத்துவதற்காக இந்த தினம் கொண்டாடப்படுகிறது.

2. **உலக சுற்றுச்சூழல் தினம் (World Environment Day)** என்று கொண்டாடப்படுகிறது?

**விடை : ஜூன் 5**

**விளக்கம் :**

1. இந்த ஆண்டிற்கான நோக்கம் (Theme): Beat Plastic Pollution
2. ஐ.நாவால் இந்த தினம் 1972 முதல் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 5-ல் கொண்டாடப்படுகிறது.
3. இந்த தினம் இந்த ஆண்டு இந்தியாவில் கொண்டாடப்பட்டது.

3. **உலக சைக்கிள் (World Bicycle Day)** தினம் என்று கொண்டாடப்பட்டது?

**விடை : ஜூன் 3**

**விளக்கம் :**

1. இந்த தினம் ஐ.நாவால் அண்மையில் அறிவிக்கப்பட்டது.
2. சைக்கிள் பயன்பாட்டை ஊக்குவிக்கவே இந்த தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

WeShine Academy

4. **உலக கடல் தினம்** என்று கொண்டாடப்படுகிறது?

**விடை : ஜுன் 8**

**விளக்கம் :**

1. நமது கடல்களின் முக்கியத்துவம் மற்றும் அதில் வாழும் உயிரினங்களின் பாதுகாப்பு ஆகியவற்றைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த தினம் ஆண்டுதோறும் **ஜுன் 8** அன்று கடைபிடிக்கப்படுகிறது.
2. 2018-ஆம் ஆண்டிற்கான கருத்து : **"பிளாஸ்டிக் மாசுக்களை தடுத்து,** ஆரோக்கியமான கடலை உருவாக்க ஊக்குவித்தல்". **("Preventing Plastic Pollution and Encouraging solution for a Healthy Ocean")**

5. **குழந்தை தொழிலாளர் ஒழிப்பு தினம்** என்று கடைபிடிக்கப்படுகிறது?

**விடை : ஜுன் 12**

**விளக்கம் :**

1. இந்த ஆண்டிற்கான நோக்கம் (Theme): **Generation, Safe and Health (பாதுகாப்பான ஆரோக்கியமான தலைமுறை)**
2. இந்த தினம் சர்வதேச தொழிலாளர் அமைப்பு **(International Labour Organisation) –ஆல் 2002 முதல் ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 12-ல்** கடைபிடிக்கப்படுகிறது.

6. **உலக இரத்ததான தினம் (WBDD – World Blood Donor Day)** என்று கடைபிடிக்கப்படுகிறது?

**விடை : ஜுன் 14**

**விளக்கம் :**

1. இரத்ததானம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், இரத்த கொடையாளிகளுக்கு நன்றி கூறும் வகையிலும் இந்த தினம் கடைபிடிக்கப்படுகிறது.
2. **2004 ஆம் ஆண்டு முதல் இந்த தினம் WHO – World Health Organization** கொண்டாடப்பட்டு வருகிறது.

3. **Theame-> Blood Connect us All.**

7. **சர்வதேச ஆப்பிரிக்க குழந்தைகள் தினம் (International Day of the African Child)** என்று கொண்டாடப்படுகிறது?

**விடை : ஜுன் - 16**

**விளக்கம் :**

1. **1976, ஜுன் 16** அன்று தென்ஆப்பிரிக்காவின், சோவெட்டோவில், தரமான கல்வி அளிக்க கோரியும், தாய்மொழியில் கல்வி வேண்டுமெனவும் **10,000-க்கு** மேற்பட்ட கருப்பின மாணவர்கள் பேரணி நடத்தினர்.

2. அப்புரட்சியில் ஏற்பட்ட வன்முறையில் 100-க்கும் மேற்பட்டகுழந்தைகள் இறந்துவிட்டனர். 1000-க்கும் மேற்பட்ட குழந்தைகள் படுகாயமடைந்தனர்.
3. இக்குழந்தைகளின் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் **ஜுன் 16-ஆம் தேதி 1991** முதல் **"சர்வதேச ஆப்பிரிக்க குழந்தைகள் தினம்"** கடைபிடிக்கப்படுகிறது.
4. இத்தினம் தரமான கல்வி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவே கடைபிடிக்கப்படுகிறது.

8. சர்வதேச பாலைவனம் (ம) வறட்சி எதிர்ப்புப் போராட்ட தினம் **(World Day to Combat Desertification and Drought)** என்று கடைபிடிக்கப்படுகிறது?

**விடை : ஜுன் 17**

**விளக்கம் :**

**1.** 2018-ஆம் ஆண்டிற்கான இந்த தினத்தின் மையக்கருத்து **"Land has true Value-invest in".**

9. **"World Sickle Cell Day"** என்று கடைபிடிக்கப்படுகிறது?

**விடை : ஜுன் 19**

**விளக்கம் :**

1. **Sickle Cell Anemia** என்பது இரத்த சிவப்பணுக்களின் வடிவங்களில் ஏற்படும் மாற்றத்தினால் இரத்தத்திலுள்ள ஹுமோகுளோவின் குறைந்து இறப்பை ஏற்படுத்தும் ஒரு மரபணு நோய் ஆகும்.
2. இந்நோய் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தவே ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 19 அன்று இந்த தினம் கொண்டாடப்படுகிறது.
3. முதன் முதலாக 2009 ஜுன் 19 அன்று இந்த தினம் கொண்டாடப்பட்டது.

10. **உலக அகதிகள் தினம் (World Refugee Day)** என்று கடைபிடிக்கப்படுகிறது?

**விடை : ஜுன் - 20**

**விளக்கம் :**

1. வன்முறை அல்லது போரினால் தங்களது வீடுகள், உடைமைகள் மற்றும் உறவினர்களை இழந்த அகதிகளின் வாழ்க்கை சூழலில் ஏற்படும் பிரச்சனைகள் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தி, அவர்களுக்கு உதவிடும் நோக்கில் இந்த தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

2. 2001 ஜுன் 20 முதல் இந்த தினம் ஐ.நா-வால் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

11. உலக மனிதநேய தினம் (World Humanist Day) என்று அனுசரிக்கப்படுகிறது?

**விடை : ஜுன் 21**

**விளக்கம் :**

1. இந்த தினம் 1980-ல் அமெரிக்காவின் ஹுானியிஸ்ட் அசோசியேஷன் என்ற அமைப்பால் உருவாக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 21-ல் கொண்டாடப்பட்டு வருகிறது.

12. சர்வதேச யோகா தினம் (International Yoga Day) என்று கொண்டாடப்படுகிறது?

**விடை : ஜுன் 21**

**விளக்கம் :**

1. இந்த ஆண்டிற்கான நோக்கம் (Theme) : Yoga for Peace (அமைதிக்கு யோகா)
2. இந்த தினம் ஐ.நா. சபையில் வாக்கெடுக்கும் மூலம் நிறைவேற்றப்பட்டு 2014 டிசம்பர் மாதம் அறிவிக்கப்பட்டது.
3. இந்த ஆண்டு உத்தரகாண்டின் டேராடூனில் நடைபெறும் நான்காவது யோகா தின நிகழ்ச்சியில் பாரத பிரதமர் பங்கேற்றார்.
4. துணை குடியரசுத்தலைவர் வெங்கையா நாயுடு அவர்கள் மும்பையின் பாந்த்ரா பகுதியில் நடைபெறும் யோகா தின நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

13. உலக நீரளவியல் தினம் (World Hydrography Day) என்று கடைபிடிக்கப்படுகிறது?

**விடை : ஜுன் 21**

**விளக்கம் :**

1. இந்த ஆண்டிற்கான நோக்கம் (Theme) : **Bathymetry-the foundation for sustainable seas, oceans and waterways”**
2. இந்த தினம் 2005-ல் ஐ.நா. சபையால் அங்கரீகரிக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 21-ல் கொண்டாடப்படுகிறது.

14. கோவா புரட்சி தினம் என்று கொண்டாடப்பட்டது?

**விடை : ஜுன் 18**

**விளக்கம் :**

1. இதே தினத்தில் தான் 1961-ல் போர்ச்சுகீசியர்களிடமிருந்து விடுதலைப் பெற்று கோவா இந்தியாவுடன் இணைக்கப்பட்டது.
2. இந்த தின கொண்டாடத்தில் கோவா முதல்வர் மனோகர் பாரிக்கர் கோவாவில் இந்த ஆண்டுக்குள் பிளாஸ்டிக் ஒழிக்கப்படும் என அறிவித்துள்ளார்.

We Shine Academy ™

15. **சர்வதேச விதவைகள் தினம் (International Widows Day)** என்று அனுசரிக்கப்படுகிறது?

**விடை : ஜூன் 23**

**விளக்கம் :**

1. உலகின் பல்வேறு நாடுகளிலுள்ள விதவைகளுக்கு ஏற்படும் அநீதிகளை களைய, அதைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த ஆண்டுத்தோறும் ஜூன் 23 அன்று கடைபிடிகக்ப்படுகிறது.

16. மருந்து துஷ்பிரயோகம் மற்றும் சட்டவிரோத கடத்தல் மீதான சர்வதேச நாள் **(International Day Against Drug Abuse and Illicit Trafficking)** என்று கடைபிடிக்கப்படுகிறது?

**விடை : ஜீன் - 26**

**விளக்கம் :**

1. இந்த ஆண்டிற்கான (நோக்கம்) Theme: **"Listen First – Listening to Children and Youth is the first step to help them grow healthy and safe"** **(குழந்தைகள் மற்றும் இளைஞர்களை கவனிப்பது ஆரோக்கியமாக மற்றும் பாதுகாப்பாக வளர உதவும் முதல்படியாகும்).**
2. இந்த தினம் 1987-ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் கடைபிடிக்கப்படுகிறது.

17. சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் தினம் **(Micro, Small and Medim-sized Enterprises Day)** என்று கொண்டாடப்படுகிறது?

**விடை : ஜூன் 27**

**விளக்கம் :**

1. இந்த ஆண்டிற்கான நோக்கம் **(Theme): The Youth Dimension** (இளைஞர் பரிணாமம்)
2. இந்த தினம் இளைஞர்களை தொழில் முனைவோராக்கும் நோக்கத்தில் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகிறது.

18. **தேசிய புள்ளியல் தினம் (National Statistics Day)** என்று கொண்டாடப்படுகிறது?

**விடை : ஜூன் 29**

**விளக்கம் :**

1. இந்த ஆண்டின் நோக்கம் (Theme): Quality Assurance in Official Statistics
2. புள்ளிவிவர மேதை மெஹலநோபிஸின் பிறந்த தினமான ஜூன் 29 தேசிய அளவிலான புள்ளியல் தினமான 2007 முதல் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகிறது.
3. இந்த ஆண்டு இவரின் 125-வது பிறந்த தினத்தையொட்டி குடியரசுத்துணைத்தலைவர் வெங்கையா நாயுடு அவர்களால் ரூ.125 மதிப்புள்ள நாணயம் மற்றும் ரூ.5 மதிப்புள்ள புதிய நாணயமும் வெளியிடப்படுகிறது.

# விருதுகள்

1. பிரதமர். நரேந்திர மோடி, முன்னாள் சிங்கப்பூர் தூதரான யாருக்கு **பத்ம ஸ்ரீ** விருதினை வழங்கினார்?

**விடை : டாமி கோ (Tommy Koh)**

**விளக்கம் :**

1. 80 வயதான டாமி கோ, அமெரிக்கா மற்றும் ஐக்கிய நாடுகளுக்கான சிங்கப்பூரின் தூதராகப் பணியாற்றியுள்ளார்.
2. இதேப்போல், 1981 (ம) 1982 ஆம் ஆண்டு கடல் சட்டத்தின்படி 3-வது ஐக்கிய நாடுகள் மாநாட்டின் தலைவராகப் பணியாற்றினார்.

2. 14-வது விசா ஆசிய பசுபிக் பாதுகாப்பு உச்சி மாநாட்டில் ($14^{th}$ Visa Asia Pacific Security Summit) சாம்பியன் செக்யூரிட்டி விருது (Champion Security Award) பெறும் வங்கி எது?

**விடை : HDFC வங்கி**

**விளக்கம் :**

1. இரண்டாவது முறையாக HDFC இவ்விருதினைப் பெறுகிறது.
2. இடையூறுகளை கையாளுதல் மற்றும் பாதுகாப்பான பணப்பரிமாற்றச் சேவையை வழங்கியமைக்காக HDFC வங்கிக்கு Champion Security Award வழங்கப்பட்டது.

3. சர்வதேச விருதை வென்ற கேரள கார்ட்டூனிஸ்ட் யார்?

**விடை : தாமஸ் ஆண்டனி**

**விளக்கம் :**

1. போர்ச்சுக்கல் நாட்டில் லிஸ்பன் என்ற இடத்தில் அமைந்துள்ள கார்ட்டூன் அமைப்புகள் மூலம் பத்திரிக்கை கார்ட்டூன் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.
2. இதன் 13-வது பதிப்பில் 9 வெற்றியாளர்கள் தேர்வு செய்யப்பட்ட நிலையில் **"Metro Vaartha"** என்ற மலையாளப் பத்திரிக்கையில் பணிபுரியும் தாமஸ் ஆண்டனிக்கும் இவ்விருது வழங்கப்பட்டது.

4. **"Investor Relations Award 2018"** விருதைப் பெறும் வங்கி எது?

**விடை : கார்ப்பரேஷன் வங்கி (Corporation Bank)**

**விளக்கம் :**

1. இவ்விருதுகள் இந்தியாவைச் சேர்ந்த Investor Relations Society என்ற அமைப்பினால் 2012 முதல் கொடுக்கப்பட்டு வருகிறது.
2. 2017-18 ஆம் ஆண்டிற்கான சிறந்த எதிர்பார்ப்பு மேலாண்மை (Mid Cap) என்ற பிரிவின் கீழ் கார்பரேஷன் வங்கிக்கு இவ்விருது அளிக்கப்பட்டது.

5. சன்சத் ரத்னா விருதை (Sansad Ratna Award) பெறும் அமைப்பு எது?

**விடை : நிதி தொடர்பான பாராளுமன்ற நிலைக்குழு**

**விளக்கம் :**

1. Prime Point Foundation என்ற அமைப்பு ஆண்டுதோறும் சிறப்பாக பணியாற்றிய MP-களுக்கு 2010 முதல் விருது வழங்கி வருகிறது.
2. அந்த வகையில் நிதி தொடர்பான பாராளுமன்ற நிலைக்குழுவின் தலைவர் M. வீரப்ப மொய்லி இவ்விருதினை பெறுகிறார்.

6. 2018-ஆம் ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரர் விருதை யார் பெற உள்ளதாக BCCI அறிவித்துள்ளது?

**விடை : விராட் கோலி**

**விளக்கம் :**

1. இதேப்போல் மகளிர் பிரிவில் ஹர்மன்பிரீத் கௌர் மற்றும் ஸ்மிருதி மந்தானா ஆகியோர் பெற உள்ளனர்.
2. BCCI – (Board of Control for Cricket in India) –ன் தலைவர் வினோத்ராய்

7. வரும் IIFA Awards – ல் வாழ்நாள் சாதனையாளர் விருதைப் பெறவிருக்கும் பிரபல இந்திய நடிகர் யார்?

**விடை : அனுபம் கெஹர்**

**விளக்கம் :**

1. வரும் ஜுன் 24-ஆம் தேதி பேங்காங்கில் நடைபெற உள்ள 19-வது IIFA விருதுகளில் கெஹருக்கு இவ்விருது வழங்கப்பட உள்ளது.
2. IIFA Awards – International Indian Film Academy Awards
3. 63-வயதான கெஹர் 500-க்கும் மேற்பட்ட படங்களை பல்வேறு மொழிகளில் நடித்துள்ளார்.

8. Women’s Prize for Fiction – 2018 விருது பெற்ற புத்தகம் எது?

**விடை : Home Fire**

**விளக்கம் :**

1. இந்தப் புத்தகத்தின் ஆசிரியர் பிரபல பிரிட்டிஷ் - பாகிஸ்தானிய எழுத்தாளர் கமிலா ஷம்சி
2. இந்தப் புத்தகம் கடந்த ஆண்டு Man Booker பரிசுப் போட்டியில் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது.

9. கல்வி நிறுவனங்களின் பிரிவில், நிகழாண்டின் Clarivate Analytics India Innovation விருது வென்ற ஐஐடி நிறுவனம் எது?

**விடை : ஐஐடி பாம்பே**

**விளக்கம் :**

1. பெங்களூரில் நடந்த இந்திய புத்தாக்க மாநாட்டில், கல்வி நிறுவனங்களின் பிரிவில் மேம்பட்ட அறிவியல் ஆராய்ச்சிக்காக ஜவஹர்லால் நேரு மையம் மற்றும் ஐஐடி பாம்பே ஆகிய கல்வி நிறுவனங்களுக்கு இந்த ஆண்டிற்கான இந்த விருது வழங்கப்பட்டது.
2. அரசு ஆராய்ச்சி நிறுவனங்களின் பிரிவில் அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மையம் (CSIR – Council of Scientific and Industrial Research) மற்றும் உயிரி தொழில்நுட்பத்துறை (DBT – Department of Biotechnology) ஆகியவற்றிற்கு நிகழாண்டுக்கான Clarivate Analytics India Innovation Award வழங்கப்பட்டது.

10. ஜப்பான் நாட்டின் கௌரவமிக்க விருதான "கலாச்சாரம் மற்றும் சமூகத்திற்கான நிக்கி ஆசியப் பரிசினை" வென்றவர் யார்?

**விடை : பிந்தேஷ்வர் பதக்**

**விளக்கம் :**

1. இவர் Sulabh International நிறுவனத்தன் நிறுவனர் ஆவார்.
2. இவ்விருது ஆசியாவில் "பிராந்திய வளர்ச்சி, அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்பு, மற்றும் கலாச்சாரம் & சமூகம்" ஆகிய 3 துறைகளில் ஏதேனும் ஒன்றில் சிறந்தது விளங்குபவருக்கு வழங்கப்படுகிறது.

3. இந்தியாவிலிருந்து முன்னாள் பிரதமரான மன்மோகன்சிங் மற்றும் இன்போசிஸ் தலைவர் நாராயண மூர்த்தி ஆகியோர் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

11. அடல் பென்சன் யோஜனா திட்டத்தை 2017-18 ஆம் ஆண்டில் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தியதற்காக விருது பெற்ற வங்கி எது?

**விடை : Oriental Bank of Commerce**

**விளக்கம் :**

1. இந்த வங்கியின் MD மற்றும் CEO முகேஷ் குமார் ஜெயின் ஆவார்.

12. மிஸ் இந்தியா 2018 பட்டம் வென்றவர் யார்?

**விடை : அனுகீர்த்தி வாஸ்**

**விளக்கம் :**

1. சென்னையை சார்ந்த இவர் இப்பட்டத்தை வென்றதன் மூலம் இந்த ஆண்டு நடைபெறும் உலக அழகி போட்டியில் இந்தியா சார்பில் பங்கேற்க உள்ளார்.
2. மிஸ் இந்தியா 2018-ல் இரண்டாம் இடத்தை ஹரியானாவை சார்ந்த மீனாட்சி சௌத்ரியும், மூன்றாம் இடத்தை ஆந்திர பிரதேசத்தை சார்ந்த ஷ்ரேயாராவ் ஆகியோரும் பெற்றனர்.

13. 2018-ம் ஆண்டுக்கான ஔவையார் விருது யாருக்கு வழங்கப்பட்டது?

**விடை : சின்னப்பிள்ளை பெருமாள்**

**விளக்கம் :**

1. பெண்கள் மேம்பாடு, சமூகசீர்திருத்தம், உள்ளிட்ட துறைகளில் சிறப்பாக பணியாற்றுவோருக்கு இவ்விருது 2012 முதல் வழங்கப்படுகிறது.
2. சின்னப்பிள்ளை பெருமாள் என்பவர் களஞ்சியம் பெண்கள் சுயஉதவிக்குழு நிறுவி பெண்களின் முன்னேற்றத்திற்கு உதவியதற்காக இவ்விருது வழங்கப்பட்டது.
3. இவர் 2000-ல் மத்திய அரசால் வழங்கப்படும் ஸ்ரீசக்தி புரஸ்கார் விருதையும் வென்றுள்ளார்.

14. 2018-ம் ஆண்டுக்கான சாகித்ய அகாதெமியின் யுவபுரஸ்கார் விருது (தமிழ்மொழி பிரிவில்) யாருக்கு வழங்கப்பட்டது?

**விடை : சுனில் கிருஷ்ணன்**

**விளக்கம் :**

1. இவர் எழுதிய அம்புப் படுக்கை எனும் சிறுகதைக்காக இவ்விருது வழங்கப்பட்டது.
2. யுவபுரஸ்கார் விருது என்பது 35 வயது கீழ் உள்ளவர்க்கு வழங்கப்படும்.
3. சுனில் கிருஷ்ணன் 2012-ல் "காந்தி இன்று" என்ற இணையதளத்தை தொடங்கி அதன் மூலம் காந்திய கொள்கையை பரப்பினார்.
4. இவரின் முதல் புத்தகம் காந்தி எல்லைகளுக்கு அப்பால் ஆகும். மேலும் நாரோபா எனும் புனைபெயரில் பதாகை, சொல்வனம், கபாடபுரம் ஆகிய இணைய இதழ்களில் இவரின் கதைகள் வெளிவந்துள்ளன.

15. "Best Performing Social Sector Ministry" SKOCH விருதைப் பெறும் அமைச்சகம் எது?

**விடை : பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டு அமைச்சகம்**

**விளக்கம் :**

1. கடந்த 4 ஆண்டுகளில் சிறப்பாக பணியாற்றியதைத் தொடாந்து இந்த அமைசச்கத்துக்கு இவ்விருது டெல்லியில் நடைபெற்ற விழாவில் பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டு அமைச்சர் மேனகா காந்தியிடம் வழங்கப்பட்டது.

16. **Sports Illustrated India Magazine வெளியிட்ட பட்டியலின் படி 2018-ஆம் ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரராக (Sports person of the year for 2018)** அறிவிக்கப்பட்டவர் யார்?

**விடை : கிடாம்பி ஸ்ரீகாந்த்**

**விளக்கம் :**

1. இதேபோல் மற்றவை:
   - ஆண்டின் சிறந்த அணி – பெண்கள் கிரிக்கெட் அணி
   - ஆண்டின் சிறந்த பயிற்சியாளர் - ஸ்டீபன் கான்ஸ்டன்டைன்
   - ஆண்டின் சிறந்த இளம் வீரர் - மானவ் விகாஸ் தக்கர்
   - வாழ்நாள் சாதனையாளர் விருது – தன்ராஜ் பிள்ளை
   - வாழ்ந்துக்கொண்டிருக்கும் தலைவருக்கான சிறப்பு விருது – **பல்வீர் சிங் ஸ்ரீ**

17. சுத்தமான மாநிலத் தலைநகர் எது?

**விடை : மும்பை**

**விளக்கம் :**

1. தூய்மையான நகரங்கள் பட்டியலில் இந்தூர் முதலிடத்தில் உள்ளது.
2. 10 லட்சத்திற்கு அதிகமாக மக்கள் தொகை உள்ள பெருநகரங்களில் சுத்தமான நகரமாக விஜயவாடா தேர்வு செய்யப்பட்டது.
3. 3-10 லட்சம் மக்கள் தொகை உள்ள நகரங்களில் சுத்தமான நகரமாக மைசூர் தேர்வு செய்யப்பட்டது.
4. 1-10 லட்சம் மக்கள் தொகை உள்ள நகரங்களில் சுத்தமான நகரமாக நியூ டெல்லி தேர்வு செய்யப்பட்டது.

18. உலகின் இரண்டாவது இளைய செஸ் கிராண்ட் மாஸ்டர் யார்?

**விடை : பிரகனாநந்தா**

**விளக்கம் :**

1. சென்னையை சேர்ந்த இவர், இத்தாலியில் நடைபெற்று வரும் கிரென்டைன் ஓபன் செஸ் போட்டியில் இறுதிச்சுற்றுக்கு தகுதி பெற்றதன் மூலம், 12 ஆண்டுகள் 10 மாதங்கள் 13 நாட்கள் மட்டுமே நிறைந்த பிரகனாநந்தா இந்தியாவின் இளைய மற்றும் உலகின் இரண்டாவது இளைய கிராண்ட் மாஸ்டர் ஆனார்.

2. கிராண்ட் மாஸ்டர் புருஸ்செர்ஸ் ரோலண்ட்டுடன் இணை சேர்ந்து பிரகனாநந்தா விளையாடியதன் மூலம் இந்த சிறப்பை பெற்றார்.
3. உக்குரைனின் செர்ஜெட் கார்ஜாகின் உலகின் இளைய செஸ் மாஸ்டராக உள்ளார்.

19. இந்த ஆண்டிற்கான பாலசாகித்ய விருது யாருக்கு வழங்கப்பட்டது?

**விடை : கிருங்கை சேதுபதி**

**விளக்கம் :**

1. இவரின் சிறகு முளைத்த யானை எனும் கவிதை தொகுப்புக்காக சாகித்யா அகாடமியின் தமிழ் பிரிவின் கீழ் பால சாகித்ய விருது வழங்கப்படுகிறது.
2. இந்த ஆண்டு டோக்ரி மொழிக்கு பாலசாகித்ய விருது இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

20. இந்தியாவின் "முதல் பழங்குடி இராணி" என மகுடம் சூட்டப்பெற்றவர் யார்?

**விடை : பல்லவி துருவா**

**விளக்கம் :**

1. ஒடிசா மாநில அரசு, மாநில சுற்றுலாத்துறை மற்றும் SC/ST துறையினரின் ஆதரவுடன் பழங்குடியினர் பெண்களுக்கான அழகிப்போட்டி இந்தியாவில் முதன் முறையாக நடத்தப்பட்டது.
2. பழங்குடியினத்தவரின் கலை மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றை வெளிக்கொணர்வதே இப்போட்டியின் நோக்கமாகும்.

21. நிகழாண்டின் "உலக உணவு பரிசை" வென்றவர்கள் யார்?

**விடை : லாரன்ஸ் ஹதாத் மற்றும் டேவிட் நபாரோ**

**விளக்கம் :**

1. வளரும் நாடுகளில் ஊட்டச்சத்து குறைபாடுகளின் தாக்கத்தை குறைக்கும் ஒரு முயற்சியாக கர்ப்பிணி பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் ஊட்டச்சத்து மிகுந்த உணவு கிடைத்தலை அதிகரிப்பதற்காக இவர்களுக்கு இப்பரிசு வழங்கப்படுகிறது.
2. இவர்களில் லாரன்ஸ் ஹதாத் ஒரு பிரிட்டிஷ் பொருளாதார நிபுணர் மற்றும் உணவு கொள்கை ஆய்வாளர் ஆவார்.

22. எந்த ஹிந்தி நடிகைக்கு பிரான்ஸ் நாட்டின் மிக உயரிய **“Knight of the Order of Arts and Letters”** என்ற விருதானது வழங்கப்பட்டுள்ளது?

**விடை : கல்கி கோய்ச்லின்**

**விளக்கம் :**

1. இது பிரான்ஸ் நாட்டின் 2-வது மிக உயரிய பொதுமக்களுக்கான விருதாகும்.
2. படங்களில் இந்திய-பிரெஞ்சு உறவுகளை சிறப்பிக்கும் அவரது பங்களிப்பிற்காக இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

23. நிகழாண்டில் நடந்த சர்வதேச இந்திய திரைப்பட அகாடெமி விருது வழங்கும் விழாவில் சிறந்த திரைப்படத்துக்கான விருதை வென்ற திரைப்படம் எது?

**விடை : துமாரி சூலு**

**விளக்கம் :**

1. பாங்காங்கில் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்வில் சிறந்த நடிகருக்கான விருது இர்ஃபான் கானுக்கும், சிறந்த நடிகைக்கான விருது ஸ்ரீதேவிக்கும் வழங்கப்பட்டது.

# நியமனங்கள்

1. மிசோரம் மாநிலத்தின் ஆளுநராக பதவியேற்றுக் கொண்டவர் யார்?

**விடை : கும்மணம் ராஜசேகர்**

**விளக்கம் :**

1. கேரள மாநிலத்தின் பாரதிய ஜனதா கட்சியின் தலைவராக இருந்த இவரை மத்திய அரசின் பரிந்துரைப்படி இந்திய குடியரசுத்தலைவரான ராம்நாத்கோவிந்த் நியமித்துள்ளார்.
2. மிசோரம் தலைநகரான ஐஸ்வாலில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில் அம்மாநில முதல்வர் தென்ஹூாவ்லா கலந்து கொண்டார்.
3. இவருக்கு கௌகாட்டி உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியான அஜீத்சிங் பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

2. இலங்கைக்கான புதிய அமெரிக்க தூதராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை : அலைனா பி டெப்லிஸ்**

**விளக்கம் :**

1. இவர் இதற்கு முன் நேபாளத்துக்கான அமெரிக்கத் தூதராக இருந்து வந்தார்.
2. இலங்கையில் தற்போது அமெரிக்க தூதராக பணியாற்றி வரும் இந்திய வம்சாவளியை சேர்ந்த அப்துல் கேஷப் மாலத்தீவுக்கான அமெரிக்க தூதராகவும் பணியாற்றி வருகிறார்.
3. அதிபர் : மைத்ரிபால ஸ்ரீசேனா
4. பிரதமர் : ரணில் விக்ரமசிங்கே
5. தலைநகரம் : கொழும்பு
6. நாணயம் : ரூபாய்

3. இத்தாலியின் புதிய பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை : கியூசெப் கான்டே (Giuseppe Conte)**

**விளக்கம் :**

1. 53 வயதாகும் இவர் சட்டத்துறை பேராசிரியர் ஆவார்.
2. தலைநகர் : ரோம்
3. நாணயம் : யூரோ
4. அதிபர் : செர்ஜியோ மேட்ரேல்ல

4. ஹரியானா, பஞ்சாப் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக பதிவியேற்றுக்கொண்டவர் யார்?

**விடை : கிருஷ்ணா முராரி**

**விளக்கம் :**

1. இவருக்கு அம்மாநில ஆளுநர் கப்தான் சோலாங்கி பதவிபிரமாணம் செய்து வைத்தார்.
2. பஞ்சாப், ஹரியானா மற்றும் யூனியன்பிரதேசமான சண்டிகருக்கும் பொதுவான உயர்நீதிமன்றமான இது சண்டிகரில் அமைந்துள்ளது.

5. ஸ்பெயின் நாட்டின் புதிய பிரதமராக அண்மையில் பதவியேற்றுக் கொண்டவர் யார்?

**விடை : பெட்ரோ சன்ஷெஸ்**

**விளக்கம் :**

1. இதற்கு முன் மரியானோ ராஜோய் ஸ்பெயின் நாட்டின் பிரதமராக பதவியேற்றார்.
2. தலைநகரம் : மத்ரித்
3. நாணயம் : யூரோ

6. மலேசியாவின் தலைமை வழக்கறிஞராக நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை : டாமி தாமஸ்**

**விளக்கம் :**

1. மலேசியாவின் அரசரான சுல்தான் முகமது V தற்போதைய தலைமை வழக்கறிஞரான முகமது அப்னடி அலிக்குப் பதிலாக டாமி தாமஸ் பொறுப்பேற்க அங்கீகாரம் கொடுத்துள்ளார்.
2. 55 வயதான டாமி தாமஸ், இப்பதவியை வகிக்க உள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்த முதல் சிறுபான்மையினர் ஆவார்.
3. பிரதமர் : மஹதிர் மொகமது
4. தலைநகர்: கோலாலம்பூர்
5. நாணயம் : மலேசிய ரிங்கிட்

7. ஜோர்டான் நாட்டின் புதிய பிரதமர் யார்?

**விடை : ஒமர் ரஸ்சாஸ் (Omar Razzar)**

**விளக்கம் :**

1. ஜோர்டான் அரசர் 2-ம் அப்துல்லா இவரை பிரதமராக நியமித்தார்.
2. இவருக்கு முன் ஜோர்டானின் பிரதமராக இருந்தவர் ஹானி முல்கி
3. தலைநகரம் : அம்மான்
4. நாணயம் : ஜோர்தானிய தினார்
5. ஜோர்டான் இளவரசர் : காஸி பின் முகமது

8. ஐ.நா. பொதுச் சபையின் புதிய தலைவர் யார்?

**விடை : மரியா பெர்னான்டா எஸ்பினோசா**

**விளக்கம் :**

1. இவர் ஈக்குவேடார் நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சராகப் பணிபுரிந்தார்.
2. ஜுன் 5 அன்று நடைபெற்ற தேர்தலில் இவர் 73-வது ஐ.நா. பொதுச் சபை தலைவராக தேர்வு செய்யப்பட்டார்.

9. திரிபுராவின் கூடுதல் பொறுப்பை ஏற்ற ஆளுநர் யார்?

**விடை : K.N. திரிபாதி**

**விளக்கம் :**

1. கேசரி நாத் திரிபாதி தற்சமயம் மேற்கு வங்காளத்தின் ஆளுநர் ஆவார்.
2. இவருக்கு கூடுதலாக திரிபுராவின் பொறுப்பை வழங்குவதாக குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த ராஷ்ட்ரபதி பவனில் தெரிவித்தார்.

10. இந்திய அரசு, நிலுவையிலுள்ள வங்கிக் கடன்களுக்கு தீர்வு காண யார் தலைமையில் குழு அமைத்துள்ளது?

**விடை : சுனில் மேத்தா**

**விளக்கம் :**

1. இக்குழுவில் SBI – ன் தலைவர் ரஜினிஷ் குமார் மற்றும் பரோடா வங்கியின் இயக்குனர் P.S. ஜெயக்குமார் ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.

11. பந்தன் வங்கியின் தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை : H.R. கான்**

**விளக்கம் :**

1. இவர் இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் துணை ஆளுநர் ஆவார்.
2. ஜூன் 5, 2018 முதல் 3 ஆண்டுகளுக்கு கான் பந்தன் வங்கியின் பகுதி நேர தலைவராகச் செயல்படுவார்.

12. மூத்த குடிமக்கள் தேசிய கவுன்சிலின் (NCSRC) 3-வது கூட்டத்திற்கு தலைமை தாங்கியவர் யார்?

**விடை : தவர்சந்த் கெஹ்லட்**

**விளக்கம் :**

1. NCSRC – National Council of Senior Citizers
2. இதன் முதல் கூட்டம் ஆகஸ்ட் 30, 2016-லும், 2-வது கூட்டம் ஜூன் 19, 2017-லும் நடைபெற்றது.

13. சான்.ஃபிரான்சிஸ்கோ நகர மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கருப்பினத்தைச் சேர்ந்த முதல் பெண் யார்?

**விடை : லண்டன் பிரீட்**

**விளக்கம் :**

1. அமெரிக்காவின் கலி.ஃபோர்னியா மாகாணத்தைச் சேர்ந்த சான் ஃபிரான்சிஸ்கோ நகர மேயர் தேர்தல் ஜூன் 5-ஆம் தேதி நடைபெற்றது.
2. இதில் மார்க் லெனோ, ஜேன் கிம் ஆகிய இருவரும் தங்களது தோல்வியை ஒப்புக்கொண்டதை அடுத்து கருப்பினத்தைச் சேர்ந்த லண்டன் பிரீட் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
3. இவர் அந்நகரின் இரண்டாவது பெண் மேயர் ஆவார்.

14. மத்திய மறைமுக வரி மற்றும் சுங்க வாரியத்தின் (CBIC) தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை : S. ரமேஷ்**

**விளக்கம் :**

1. CBIC – Central Board of Indirect Taxes and Customs
2. CBIC – ன் தலைமைப் பதவியிலுள்ள வனஜா.என்.சர்னா-வின் பதவிக்காலம் நடப்பு மாதத்தோடு முடிவடைவதைத் தொடர்ந்து S. ரமேஷ் அப்பொறுப்பை வகிக்க உள்ளார்.

15. ICICI வங்கியின் முழுநேர இயக்குனராக நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை : சந்தீப் பாக்ஷி (Sandeep Bakhshi)**

**விளக்கம் :**

1. இவர் ICICI வங்கியின் COO (Chief Operating Officer) ஆகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.
2. வரும் ஜூன் 19, 2018 முதல் இவர் COO ஆக பொறுப்பு வகிக்க உள்ளார்.

16. ஜம்மு-காஷ்மீரின் புதிய தலைமை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை : பி.வி.ஆர். சுப்ரமணியம்**

**விளக்கம் :**

1. ஆந்திராவை பூர்விகமாக கொண்ட இவர் 1987-ல் ஐ.ஏ.ஸ். ஆனார். இவர் பிரமர் அலுவலகம், உலக வங்கி, சத்தீஸ்கர் மாநில கூடுதல் தலைமை செயலாளர் ஆகிய பொறுப்புகளை வகித்துள்ளார்.

17. சிக்கிம் மாநில அரசின் விளம்பர தூதராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை : ஏ.ஆர். ரஹ்மான்**

**விளக்கம் :**

1. சிக்கிம் மாநில அரசின் சாதனை மற்றும் நலத்திட்டங்களை தேசிய மற்றும் உலகளவில் பிரபலபடுத்துவதற்காக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
2. 2018-ம் ஆண்டு தொடக்கத்தில் சிக்கிம் மாநில சுற்றுலா மற்றும் விளம்பர தூதராக ஏ.ஆர். ரஹ்மான் நியமிக்கப்பட்டார்.

18. மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம் (Central Vigilance Commission)-ன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை : சரத்குமார்**

**விளக்கம் :**

1. இவரின் பதவிக்காலம் 4 ஆண்டுகள் அல்லது 65 ஆண்டுகள் ஆகும்.

2. இவர் தேசிய புலனாய்வு அமைப்பு (National Investigation Agency) –ன் முன்னாள் தலைவர் ஆவார்.

### 3. National Investigation Agency

- இது 2009 தொடங்கப்பட்டது.

We Shine Academy TM

➢ இதன் தலைமையிடம் புதுடெல்லி ஆகும்.

19. மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் **(Union Public Service Commission) –ன்** தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை : அரவிந்த் சக்சேனா**

**விளக்கம் :**

1. இவர் இதற்கு முன் இந்த அமைப்பின் உறுப்பினராக இருந்தார்.
2. இதற்கு முன் மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் **(Union Public Service Commission)** –ன் தலைவராக இருந்த வினய் மிட்டல் ஜூன் 19-ல் ஓய்வு பெற்றார்.
3. இது 1926 அக்டோபர் 1-ல் உருவாக்கப்பட்டது.
4. தலைமையிடம் புதுடெல்லி ஆகும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

1. நில அதிர்வுகளை கண்காணித்து அளவிடும் 10 சைஸ்மோ மீட்டர்களை இந்தியப் பெருங்கடலில் வெற்றிகரமாக பொருத்தியுள்ள நாடு எது?

**விடை : சீனா**

**விளக்கம் :**

1. இதனுடைய வாழ்நாள் சில மாதங்கள் முதல் ஒரு வருடமாகும்
2. இதற்கு முன் பொருத்தப்பட்ட 15 சைஸ்மோ மீட்டர்களை ஆய்வு செய்ய அதனை இந்தியப்பெருங்கடலில் இருந்து எடுத்துள்ளது.
3. தலைநகரம் : பெய்ஜிங்
4. அதிபர் : ஜீ ஜின்பிங் (சீனா கம்யூனிஸ்ட் கட்சி)
5. பிரதமர் : லி கிகாங்
6. நாணயம் : ரென்மின்பி

2. ரயில்வே துறையால் அண்மையில் வெளியிடப்பட்ட புதிய செயலிகளின் பெயர் என்ன?

**விடை : Rail MADAD, Menu on Rails**

1. Rail MADAD என்ற செயலியில் பயணிகள் தங்கள் புகார்களை தெரிவிக்கலாம்.
2. Menu on Rails என்ற செயலியின் மூலம் பயணிகள் தாங்கள் செல்லும் ரயில்களில் எந்த வகை உணவு வழங்கப்படுகிறது என அறியலாம்.
3. இந்த இரண்டு செயலிகளும் மத்திய இரயில்வே துறை அமைச்சர் பியூஸ் கோயல் மற்றும் ரயில்வே துறை இணைஅமைச்சர் மனோஜ் சின்ஹா ஆகியோரால் வெளியிடப்பட்டது.
4. 2009-2014 வரையிலான காலத்தில் நாள் ஒன்றுக்கு 4.1 கிலோமீட்டர் தொலைவுக்கு மட்டுமே ரயில்பாதை அமைக்கப்பட்டு வந்தது. ஆனால் 2014-2018 ஆகிய ஆண்டுகளில் நாள் ஒன்றுக்கு 6.5 கிலோமீட்டர் தொலைவு ரயில்பாதை அமைக்கப்பட்டது.

3. 30 PSLV, 10 கனரக GSLV உருவாக்க மத்திய அரசு எப்போது ரூ.10, 400 கோடி நிதி ஒதுக்கியது?

**விடை : ஜூன் 6, 2018**

**விளக்கம் :**

1. இதனை தற்போதைய இஸ்ரோ தலைவரான கே.சிவன் தெரிவித்தார்.
2. இந்த ஆண்டு இறுதிக்குள் சந்திரயன்-2 ஏவப்படும் என்றும், இதேபோல; GSAT – 29 GSAT – 11 ஆகிய செயற்கைக்கோள்கள் இந்த ஆண்டு இறுதிக்குள் விண்ணில் செலுத்தப்படும் என்றும் கூறியுள்ளார்.
3. GSAT – 31, GSAT – 7A 2019-ல் விண்ணில் செலுத்தப்படும் எனவும் அறிவித்துள்ளார்.

4. CRIS அறிமுகப்படுத்திய புதிய செயலி எது?

**விடை : "Utsonmobile" APP**

**விளக்கம் :**

1. CRIS – Centre of Railway Information System
2. CRIS ஆனது பணப்பரிவர்த்தனை அற்ற டிஜிட்டல் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் வகையில் இந்தச் செயலியை உருவாக்கியுள்ளது.
3. இதன் மூலம், ரயில்வே டிக்கெட்டுகளை முன்பதிவு மற்றும் ரத்து செய்யவும், R-Wallet Balance –யை நிரப்பவும், பயனாளர்களின் முன்பதிவு வரலாறுகளை மேம்படுத்தவும் முடியும்.

5. அக்னி – 5 ஏவுகணை முதன்முதலாக எப்போது சோதிக்கப்பட்டது?

**விடை : ஏப்ரல் 2012**

**விளக்கம் :**

1. இது இலக்கை எட்டிய பிறகு மீண்டும் தரையை வந்தடையும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது 5000 கிலோமீட்டர் வரை சென்று இலக்கை துல்லியமாக தாக்கும்.
2. 2013-ல் இரண்டாவது முறையாக சோதிக்கப்பட்டது, 2015, 2016, 2017 ஜனவரி ஆகிய ஆண்டுகளில் அடுத்தடுத்து சோதிக்கப்பட்டது. இதன் ஆறாவது சோதனை ஜூன் 1, 2018-ல் ஒடிசாவில் உள்ள அப்துல்கலாம் தீவில் சோதித்து பார்க்கப்பட்டது.
3. அக்னி-1 700 கிலோமீட்டரும், அக்னி-2 2000 கிலோமீட்டர், அக்னி-3 2500 கிலோமீட்டர், அக்னி-4 3500 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள இலக்கை தாக்கி அளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டன.

We Shine Academy TM

6. எந்த ஆண்டிற்குள் 1 கோடி குடும்பங்களுக்கு குழாய் மூலமாக எரிவாயு இணைப்பு வழங்க மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு கட்டுப்பாட்டு வாரியம் திட்டமிட்டுள்ளது?

**விடை : 2020**

**விளக்கம் :**

1. இத்திட்டத்தின் கீழ் தமிழகத்தில் முதல்கட்டமாக 11 மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அவை முறையே சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், நாகை, திருவாரூர், ராமநாதபுரம், திருப்பூர், கோவை, சேலம் ஆகும்.
2. இதேபோல் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள புதுச்சேரி, மாஹே மற்றும் காரைக்கால் ஆகியவை தேர்வு செய்யப்பட்டுள்ளது.
3. இத்திட்டம் ஏற்கெனவே டெல்லி, மும்பை மற்றும் கொல்கத்தா ஆகிய நகரங்களில் நடைமுறையில் உள்ளது.

7. இந்தியாவில் 400 ரயில்நிலையங்களுக்கு இலவச இணைய சேவை (Wifi-Service) எந்த இரு நிறுவனங்கள் இணைந்து வழங்கி வருகிறது?

**விடை : Google & Rail Tel**

**விளக்கம் :**

1. டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் கீழ் 2016-ல் இத்திட்டம் மும்பையில் உள்ள ரயில் நிலையத்தில் தொடங்கப்பட்டது.
2. இத்திட்டத்தின் கீழ் இலவச இணைய வசதி பெறும் 400-வது ரயில்நிலையம் திப்ரூகர் நகர் (அஸ்ஸாம்) ரயில் நிலையம் ஆகும்.

8. தனுஷ் ஏவுகணை திட்டம் எப்போது தொடங்கப்பட்டது?

**விடை : 2011 அக்டோபர்**

**விளக்கம் :**

1. முதன் முறையாக இந்தியாவிலிலேயே தயாரிக்கப்பட்டதும், நீண்ட தூரம் இலக்கை தாக்கி அழிக்ககூடியதுமான இந்த ஏவுகணை தனது இறுதி சோதனையை நிறைவுசெய்து ராணுவத்தில் இணைய தயாராக உள்ளது.

9. அணுசக்திகென பிரத்யேக பல்கலைக்கழகம் அமைக்க உள்ள நாடு எது?

**விடை : சீனா**

**விளக்கம் :**

1. அணுசக்தி பற்றிய புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் அணுஉலை ஆகியவற்றை மாணவர்களிடையே கொண்டு செல்லும் வகையில் இப்பல்கலைக்கழகம் அமைக்க உள்ளதாக சீனா அறிவித்துள்ளது.

10. உலகின் அதிவேக சூப்பர் கம்யூட்டரை உருவாக்கியுள்ள நாடு எது?

**விடை : அமெரிக்கா**

**விளக்கம் :**

1. சம்மிட் என்று பெயரிடப்பட்டுள்ள இதனை அமெரிக்காவின் ஒக்ரிட்ஜ் தேசிய ஆய்வகம் வடிவமைத்துள்ளது.

11. 2018 ஜுலை 1 முதல் உள்நாட்டு உபயோகத்திற்கான எந்த மருந்தை பொதுத்துறை மட்டுமே தயாரிக்க இந்திய அரசு கட்டுபாடு விதித்துள்ளது?

**விடை : ஆக்சிடோசின்**

**விளக்கம் :**

1. ஆக்சிடோசின் மற்றும் அதன் இணை தயாரிப்பு மருந்துகளை இறக்குமதி செய்யவும் மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல்வாழ்வு அமைச்சகம் கட்டுபாடு விதித்துள்ளது.

2. ஜுலை 1 முதல் Karnataka Antibiotics & Pharmaceuticals Ltd என்ற பொது துறை நிறுவனம் மட்டும் இம்மருந்தை உற்பத்தி செய்ய அனுமதிக்கப்படும்.



We Shine Academy™

# விளையாட்டு நிகழ்வுகள்

1. அண்மையில் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ள இந்திய வட்டு எரிதல் வீரர் யார்?

**விடை : விகாஸ் கௌடா**

**விளக்கம்:**

1. காமன்வெல்த் போட்டியில் முதன் முறையாக தங்கப்பதக்கம் வென்ற வீரர் இவர்.
2. இவரே காமன்வெல்த் தடகள போட்டியில் தங்கம் பதக்கம் வென்ற ஒரே வீரர் ஆவார்.
3. வட்டு எறிதலில் இவரது தேசிய சாதனையான 66.28 மீட்டர் தூரம் இன்றுவரை யாரும் எட்டாத சாதனையாக உள்ளது.
4. 2013, 2015 சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கமும், 2017 ஆசியா சாம்பியன்ஷிப் போட்டியில் வெண்கலப்பதக்கமும் வென்றுள்ளார்.
5. இதேபோல் 2010 காமன்வெல்த்தில் வெண்கலமும், 2014 காமன்வெல்த் போட்டியில் வெள்ளிப்பதக்கமும் வென்றுள்ளார்.

2. உலக மகளிர் ஹாக்கி கோப்பை போட்டி வரும் ஜூலை மாதம் எங்கு நடைபெற உள்ளது?

**விடை : லண்டன்**

**விளக்கம்:**

1. இதில் இந்திய மகளிர் ஹாக்கி அணியின் கேப்டனாக ஓய்வுபெற்ற ராணி ராம்பால் மீண்டும் கேப்டனாகவே சேர்த்துக்கொள்ளப்பட்டார்.
2. துணை கேப்டனாக சவீதா உள்ளார்.

3. உலக கோப்பைப் போட்டிகளுக்காக ரஷ்யாவில் கட்டப்பட்ட புதிய மைதானம் எது?

**விடை : சமாரா மைதானம்**

**விளக்கம்**

1. இது காஸ்மாஸ் மைதானம் எனவும் அழைக்கப்படும்.
2. கடந்த 2014-ல் கட்டுமானப் பணிகள் தொடங்கி 2018-இல் முடிவடைந்த நிலையில் 44918 பார்வையாளர்கள் அமர்வதற்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
3. 21-வது உலக கோப்பை கால்பந்து போட்டிகள் 2018-இல் ஜூன் 14 முதல் ஜூலை 15 வரை நடைபெற உள்ளன.

4. தென் ஆப்பிரிக்காவின் சிறந்த கிரிக்கெட் வீரர் யார்?

**விடை : காகிஸோ ரபாடா**

**விளக்கம்:**

1. கடந்த ஆண்டு ஜூலை மாதம் முதல் தற்போது வரை நடைபெற்ற 12 டெஸ்ட் போட்டிகளில் 72 விக்கெட்டுகளை ரபாடா வீழ்த்தியுள்ளார்.
2. இதன் மூலம், தென் ஆப்பிரிக்காவின் நிகழாண்ட சிறந்த கிரிக்கெட் வீரராக உலகின் முதல் நிலை டெஸ்ட் பந்துவீச்சாளர் காகிஸோ ரபாடா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

5. உலகக்கோப்பை 2018-போட்டிகள் எங்கு நடைபெற உள்ளது?

**விடை : ரஷ்யா**

**விளக்கம்:**

1. இந்த ஆண்டு நடைபெறும் போட்டிக்கு 4 முறை (1934, 1938, 1982, 2006) சாம்பியன் பட்டம் வென்ற இத்தாலி அணி தகுதி பெறவில்லை.
2. ஐஸ்லாந்து, பனாமா ஆகிய நாடுகள் முதன்முறையாக தகுதிபெற்றுள்ளன.
3. நெதர்லாந்து, அமெரிக்கா, கானா ஆகிய நாடுகள் இப்போட்டிக்கு தகுதி பெறவில்லை.
4. தலைநகர் : மாஸ்கோ
5. அதிபர் : விளாடிமிர் புதின்
6. பிரதமர் : திமித்ரி மெட்வெடெவ்

We Shine Academy ™

7. நாணயம் : ரஷ்ய ரூபிள்

6. 2026 – உலகக்கோப்பை கால்பந்து போட்டியை நடத்த விண்ணப்பித்துள்ள நாடுகள் எவை?

**விடை : கத்தார், வடஅமெரிக்கா நாடுகளான கனடா, மெக்ஸிகோ, அமெரிக்கா**

**விளக்கம்:**

1. தற்போது உலகக்கோப்பை கால்பந்து போட்டியில் 32 நாடுகள் மட்டுமே விளையாடி வருகின்றன. இந்த எண்ணிக்கையை 2026 போட்டியில் 48 நாடுகளாக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.
2. FIFA – தற்போதைய தலைவர் - ஜியானி இன்பேன்டினோ
3. FIFA – Federation Internationale de Football Association
4. 2022 உலகக்கோப்பை கால்பந்து போட்டி கத்தார் நாட்டில் நடைபெற உள்ளது.
5. 2014 உலகக்கோப்பை கால்பந்து போட்டி பிரேசில் நாட்டில் நடைபெற்றது.

7. கிரிக்கெட் வீரர் விராட் கோலியின் மெழுகு சிலை எங்கு பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது?

**விடை : மேடம் துஸ்ஸாட் அருங்காட்சியம், டெல்லி**

**விளக்கம்:**

1. மெழுகு சிலைக்குப் புகழ் பெற்ற இந்த அருங்காட்சியகத்தில் லயோனல் மெஸ்ஸி, கபில் தேவ், உசைன் போல்ட் ஆகியோரின் வரிசையில் விராட் கோலியின் சிலை தற்போது நிறுவப்பட்டுள்ளது.
2. அமெரிக்காவின் ∴போர்ப்ஸ் பத்திரிக்கை வெளியிட்டுள்ள, உலகின் அதிக வருவாய் ஈட்டும் விளையாட்டு வீரர்கள் பட்டியலில் விராட் கோலி 83-வது இடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

8. FIFA கால்பந்து தரவரிசைப் பட்டியலில் இந்தியா எத்தனையாவது இடத்தில் உள்ளது?

**விடை : 97**

**விளக்கம்:**

1. இதில் நடப்பு உலக சாம்பியன் ஜெர்மனி முதலிடத்திலும், 2018 உலகக் கோப்பை போட்டியை நடத்தும் ரஷ்யா 70-வது இடத்திலும் உள்ளன.
2. இதில் 5 முறை சாம்பியனான பிரேசில் 2-வது இடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

9. 19-வது ஆசிய மகளிர் வாலிபால் போட்டிகள் எங்கு நடைபெற உள்ளது?

**விடை : வியட்நாம்**

**விளக்கம்:**

1. ஜூன் 10 முதல் 17 வரை நடைபெற உள்ளது.
2. 19 – வயதிற்குட்பட்ட இந்திய மகளிர் வாலிபால் அணியில் விளையாடுவதற்கு பி.கே.ஆர் மகளிர் கல்லூரி (கோபிசெட்டிபாளையம், ஈரோடு மாவட்டம்) மாணவி எஸ்.ஷாலினி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
3. தலைநகரம் : ஹானோய்
4. நாணயம் : வியட்நாமிய டாங்க்
5. பிரதமர் : நாஞ்சில் நாடன் சிங்

10. T20I (Twenty 20 International) –ல், 2,000 ரன்கள் எடுத்த முதல் இந்திய பெண்மணி யார்?

**விடை : மித்தாலி ராஜ்**

**விளக்கம்:**

1. இவர் 75 ஆட்டங்களில் மொத்தமாக 2015 ரன்களை எடுத்துள்ளார்.
2. உலகளவில் T20I 2000 ரன்கள் எடுத்த 7-வது பெண் மித்தாலி ராஜ் ஆவார்.

11. ஆசிய ஜூனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கம் வென்றவர் யார்?

**விடை : ஜிஸ்னா மேத்யூ**

**விளக்கம்:**

1. இந்தியாவைச் சேர்ந்த இவர் 400 மீட்டரை 53.26 வினாடிகளில் கடந்து தங்கம் வென்றார்.
2. இப்போட்டிகள் ஜப்பானின் ஜிபுநகரில் நடைபெற்றன.

12. அயர்லாந்துக்கு எதிரான ஒரு நாள் போட்டியில் நியூஸிலாந்து மகளிர் கிரிக்கெட் அணி எத்தனை ரன்கள் பெற்று சாதனைப் படைத்தது?

**விடை : 490/4**

**விளக்கம்:**

1. இதற்கு முன்னர் ஒரு நாள் போட்டியில் இங்கிலாந்து அணி 444 ரன்களை எடுத்ததே அதிக ரன் குவிப்பாகும்.
2. தற்போது ஒரு நாள் போட்டியில் அதிக ரன் குவித்த அணி என்ற பெருமையை நியூஸிலாந்து மகளிர் கிரிக்கெட் அணி பெற்றுள்ளது.

13. தமிழ்நாடு கிரிக்கெட் சங்கம் சார்பில் மகளிர் ஒரு நாள் T20 போட்டிகள் எப்போது நடைபெற உள்ளன?

**விடை : ஜூன் 15 முதல் 30 வரை**

**விளக்கம் :**

1. இதில் கிரிக்கெட் வீராங்கனைகள் எல்லோ சேலஞ்சர்ஸ், ரெட் ரேஞ்சர்ஸ், ஒயிட் வாரியர்ஸ், புளு அவெஞ்சர்ஸ், கிரீன் இன்வேடர்ஸ், சில்வர் ஸ்ட்ரைக்கர்ஸ் என 6 அணிகளாக பிரிக்கப்பட்டு ஒரு நாள் மற்றும் T20 போட்டிகளில் விளையாடுவார்.
2. இதற்கு இந்தியன் வங்கி ஸ்பான்சராக உள்ளது.

14. உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் எந்த அணி வெல்லும் என குறி சொல்ல அதிகாரப்பூர்வமாக தேர்வு செய்யப்பட்ட பூனையின் பெயர் என்ன?

**விடை : அச்சிலீஸ்**

**விளக்கம் :**

1. ஒவ்வொரு உலகக் கோப்பை கால்பந்து போட்டிகளின் போதும் விலங்குகளைக் கொண்டு பட்டம் வெல்லும் அணி எது என முன்கூட்டியே கணித்து கூறப்படுகிறது.
2. இதன்படி, கடந்த 2010-ல் தென்னாப்பிரிக்காவில் நடந்த உலகக் கோப்பை போட்டியில் பால் என்ற ஆக்டோபஸ், ஸ்பெயின் அணி வெல்லும் என சரியாக கணித்தது.
3. இதேபோல், 2014-ல் ஷாகின் என்ற ஒட்டகம் குறி சொல்லியது.

15. பிரெஞ்ச் ஓபன் மகளிர் ஒற்றையர் பிரிவில் பட்டம் வென்றவர் யார்?

**விடை : சிமோனா ஹலேப்**

**விளக்கம்:**

1. பாரிஸில் நடைபெற்று வந்த இந்தப் போட்டியில் ருமேனியா நாட்டைச் சேர்ந்த சிமோனோ ஹலேப் 3-6, 6-4, 6-1 என்ற செட் கணக்கில் அமெரிக்காவின் ஸ்லோன் ஸ்டீபன்ஸை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றார்.
2. இது இவரது முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டமாகும்.

16. யூத் ஒலிம்பிக்ஸ் போட்டிக்கு தகுதி பெற்ற இந்திய இளம் டேபிள் டென்னிஸ் வீராங்கனை யார்?

**விடை : அர்ச்சனா காமத்**

**விளக்கம்:**

1. இவர் தனது கடைசி முயற்சியாக சனிக்கிழமை குக் தீவில் நடைபெற்ற இறுதி தகுதி ஆட்டத்தில் மலேசியாவின் சேங் அலிஸ்லியை 4-1 என்ற செட் கணக்கில் வீழ்த்தி யூத் ஒலிம்பிக்ஸ் போட்டிக்கு தகுதி பெற்றார்.

17. விம்பிள்டன் ஒற்றையர் பட்டத்தை வென்ற முதல் தென் அமெரிக்கப் பெண்மணி யார்?

**விடை : மரியா ப்யூனோ**

**விளக்கம்:**

1. பிரேசில் நாட்டின் டென்னிஸ் ராணி என அழைக்கப்பட்ட இவர் சாவ் பாலோ என்ற மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்தார்.
2. 78-வயதான இவர் 3 விம்பிள்டன் மற்றும் 4 அமெரிக்க சாம்பியன்ஷிப் ஒற்றையர் பட்டங்களை வென்றுள்ளார்.

18. தேசிய சப்ஜீனியர் ரோயிங் (துடுப்பு படகு) போட்டியில் வெற்றி பெற்ற அணி எது?

**விடை : தெலுங்கானா**

**விளக்கம்:**

1. போரூர் ஸ்ரீ ராமசந்திரா நீர்விளையாட்டு மையத்தில் இப்போட்டிகள் நடைபெற்றன.
2. இந்திய ரோயிங் கூட்டமைப்புத் தலைவர் ராஜலட்சுமி சிங் தியோ, வென்ற தெலுங்கானா அணிக்கு கோப்பை வழங்கினார்.

19. பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் சாம்பியன் பட்டம் வென்றவர் யார்?

**விடை : ர.ஃபேல் நடால்**

**விளக்கம்:**

1. உலகின் முதல் நிலை வீரரும், நடப்புச் சாம்பியனுமான நடால் 11-வது முறையாக சாம்பியன் பட்டம் பெற்றுள்ளார்.
2. பாரிஸ் ரோலண்ட் காரோஸ் மைதானத்தில் கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ்ச் ஓபன் போட்டிகள் நடந்து வருகின்றன.

20. ஆசிய மகளிர் T20 கிரிக்கெட் போட்டியில் கோப்பையை வென்ற நாடு எது?

**விடை : வங்கதேசம்**

**விளக்கம்:**

1. நடப்பு சாம்பியனான இந்தியாவை 3 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி வங்கதேசம் முதன் முறையாக சாம்பியன் பட்டம் வென்றது.
2. கோலாலம்பூரில் ஆசியக் கோப்பை மகளிர் T20 போட்டிகள் நடைபெற்று வருகின்றன.
3. இதுவரை இப்போட்டியில் இந்தியா 6 முறை சாம்பியன் ஆனது குறிப்பிடத்தக்கது.
4. பிரதமர் : ஷேக் ஹசீனா
5. தலைநகர்: டாக்கா
6. நாணயம் : வங்காளதேச இட்டாக்கா
7. அதிபர் : அப்துல் ஹமீது

21. எந்த ஆண்டுக்குள் இந்தியாவின் 20 மாவட்டங்களில் விளையாட்டு பள்ளி திறக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது?

**விடை : 2019**

**விளக்கம்:**

1. இதேபோல் அடுத்த 4 ஆண்டுகளில் 150 மாவட்டங்களில் விளையாட்டு பள்ளிகள் திறக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

22. இந்தியா எந்த ஆண்ட இளையோர் ஒலிம்பிக் போட்டியை (Youth Olympic Games) நடத்த சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியிடம் விண்ணப்பித்துள்ளது?

**விடை : 2026**

**விளக்கம்:**

1. இதேபோல் 2030-ல் ஆசிய போட்டிகள் நடத்தவும், 2032-ல் டெல்லியில் ஒலிம்பிக் போட்டி நடத்தவும், 2021-ல் IOC மாநாட்டை இந்தியாவில் நடத்தவும் தனது விருப்பத்தை தெரிவித்துள்ளது.

23. இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டனான விராட்கோலிக்கு சிறந்த வீரருக்கான விருது எந்த இரு ஆண்டுக்காக வழங்கப்பட்டது?

**விடை : 2016-2017, 2017-2018**

**விளக்கம்:**

1. இதேபோல் 2016-2017 ஆண்டிற்கான சிறந்த வீராங்கனைக்கான விருது ஹர்மன் பிரித்கௌருவுக்கும், 2017-2018-ம் ஆண்டிற்கான விருது ஸ்மிருதி மந்தானாவிற்கும் வழங்கப்பட்டது.
2. கிரிக்கெட் சங்கத்திற்கான விருது மேற்குவங்கம் மற்றும் டெல்லி கிரிக்கெட் சங்கங்களுக்கு வழங்கப்பட்டது.
3. இவ்விருது வழங்கும் விழாவில் சிறப்பு விருந்தினராக இங்கிலாந்து கிரிக்கெட் அணி வீரர் கெவின் பீட்டர்சன் கலந்துக்கொண்டார்.

24. “Canadian Grand Prix” –ல் சாம்பியன் பட்டம் வென்றவர் யார்?

**விடை : செபாஷ்டின் விட்டேல்**

**விளக்கம்:**

1. பெரார்ரி (Ferrari) கார் பந்தைய வீரரான இவர் ஜெர்மனிய நாட்டைச் சேர்ந்தவர்.
2. 2008-ல் நடைபெற்ற Ita;ian Grand Prix வெற்றியே இவரது முதல் வெற்றி ஆகும்.
3. Canadian Grand Prix – ல் 2-வதாக வந்தவர் மெர்சிடஸின் வால்டர்டி பாடாஸ், 3-வதாக வந்தவர் ரெட் புல்-ன் மேக்ஸ் வெர்ஸ்டபேன்.

25. 21-வது குஜகுயு கால்பந்து உலகக்கோப்பை போட்டிக்கு முதன்முறையாக தகுதி பெற்ற அணிகள் எவை?

**விடை : பனாமா, ஐஸ்லாந்து**

**விளக்கம் :**

1. எகிப்து, மொராக்கோ மற்றும் பெரு ஆகிய நாடுகள் நீண்ட ஆண்டுகளுக்கு பிறகு இந்த ஆண்டு நடைபெறும் உலகக்கோப்பை போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.
2. இப்போட்டி ரஷ்யாவின் மாஸ்கோவில் உள்ள லூசினிக்கி விளையாட்டு அரங்கில் தொடங்கியது.
3. ரஷ்யாவும் சவுதிஅரேபியாவும் மோதிய முதல் போட்டியில் ரஷ்யா 5-0, என்ற கோல் கணக்கில் சவுதிஅரேபியாவை வீழ்த்தி முதல்வெற்றியை பதவி செய்தது.
4. அடுத்த உலகக்கோப்பை கால்பந்து போட்டி 2022 கத்தாரில் நடைபெற உள்ளது.

26. மெர்சிடெஸ் கோப்பையை (Mercedes Cup) வென்றவர் யார்?

**விடை : ரோஜர் ஃபெடெரர்**

**விளக்கம் :**

1. இது ரோஜர் ஃபெடெரரின் 98-வது ஏடிபி பட்டமாகும்.
2. இந்த வெற்றி மூலம் இவர் மீண்டும் உலகின் முதல்நிலை வீரர் என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ளார்.

27. 50 ஓவர் ஒருநாள் கிரிக்கெட் போட்டி தொடரில் அதிக ரன்களை குவித்த நாடு எது?

**விடை : இங்கிலாந்து**

**விளக்கம் :**

1. இப்போட்டி ஜூன் 19 அன்று நாட்டிங்ஹாமில் நடைபெற்றது.
2. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இப்போட்டியில் இங்கிலாந்து 481/6 ரன்களை பெற்று புதிய உலக சாதனையைப் படைத்துள்ளது.



We Shine Academy TM

28. பிரெஞ்ச் ஓபனில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் பட்டம் வென்றவர் யார்?

**விடை : ரபேல் நடால் (ஸ்பெயின்)**

**விளக்கம் :**

1. இவர் 11-முறையாக பிரெஞ்சு ஓபன் பட்டத்தை வென்றார்.
2. இறுதி போட்டியில் டோமினிக் தீம் என்பவரை வீழ்த்தி இப்பட்டத்தை வென்றார்.
3. இதேபோல் மகளிர் ஒற்றையர் பிரிவில் ருமேனியாவின் சிமோன ஹலோப் என்பவர் சாம்பியன் பட்டம் வென்றார்.

29. சிங்கப்பூர் தேசிய நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டியில் சந்தீப் செஜ்வால் பெற்ற பதக்கம் என்ன?

**விடை : தங்கம்**

**விளக்கம் :**

1. இந்தியாவைச் சேர்ந்த இவர் ஆடவருக்கான 50மி பிரெஸ்ட் ஸ்ட்ரோக் பிரிவில் தங்கம் வென்றார்.

30. ஐ.எஸ்.எஸ்.எப. ஜுனியர் உலகக்கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டி எங்கு நடைபெற்று வருகிறது?

**விடை : சுல் நகர் (ஜெர்மனி)**

**விளக்கம் :**

1. இப்போட்டியில் 10 மீட்டர் ஏர்பிஸ்டல் பிரிவில் இந்தியாவின் மானுபேக்கர் உலக சாதனையுடன் தங்கம் வென்றார்.
2. ஆடவருக்கான 25 மீட்டர் ரேபிட் ஃபையர் பிஸ்டல் பிரிவில் இந்தியாவின் அனிஷ் பன்வாலா வெண்கலப்பதக்கம் வென்றார்.

# வர்த்தக நிகழ்வுகள்

1. இந்திய ரிசர்வ் வங்கியின் ரெப்போ ரேட் (Repo Rate) எவ்வளவு?

**விடை : 6.25%**

**விளக்கம்**

1. ரிவர்ஸ் ரெப்போ ரேட் (Reverse Repo Rate) – 6%
2. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் நிலவரம் (GDP growth outlook) – 7.4%
3. விளிம்புநிலை வசதி விகிதம் (Marginal Standing Facility Rate) – 6.5%
4. வங்கி விகிதம் (Bank Rate) – 6.5%

2. இந்தியாவின் சிறப்பு பொருளாதார மண்டலங்கள் கொள்கையை (SEZ Policy) ஆய்வு செய்ய யார் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது?

**விடை: பாபா கல்யாணி**

**விளக்கம்:**

1. இவர் Bharat Forge அமைப்பின் தலைவர் ஆவார்.
2. இக்குழுவில் மொத்தம் 10 உறுப்பினர்கள் உள்ளனர்.
3. இக்குழுவானது, தற்போது உள்ள பொருளாதார கொள்கையை ஆய்வு செய்து அதில் புதிய மாற்றங்களை மேற்கொள்வதற்கான பரிந்துரையை 3 மாதத்திற்குள் சமர்பிக்க வேண்டும்.

3. பயங்கரவாத அச்சுறுத்தல்களினால் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஆபத்துள்ள (GDP Risk) உலகின் முதல் 10 நகரங்களில் இந்திய நகரங்கள் எத்தனை உள்ளன?

**விடை : 3**

We Shine Academy

**விளக்கம்:**

1. இந்தியாவின் டெல்லி, மும்பை மற்றும் பெங்களுரு ஆகிய நகரங்கள் முறையே நகர அபாய குறியீட்டில் (CRI – City Risk Index) 5, 6 மற்றும் 7-ம் இடங்களைப் பெற்றுள்ளன.
2. Lloyd's India என்ற அமைப்பு இந்த ஆய்வை மேற்கொண்டது.

5. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி சதவீதம் என்ன?

**விடை : 7.3%**

**விளக்கம்:**

1. நடப்பு ஆண்டில் 7.3% மாக இருக்கும் இந்தப் பொருளாதார வளர்ச்சி அடுத்த 2 ஆண்டுகளில் 7.5% -மாக வளரும் என உலக வங்கி கூறியுள்ளது.
2. இதேபோல், தெற்கு ஆசியாவின் வளர்ச்சி 2018 ஆம் ஆண்டில் 6.9% -மாக வலுப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

6. இந்திய ரூபாயின் மதிப்பு எப்போது வரலாறு காணாத வீழ்ச்சி அடைந்தது?

**விடை : ஜுன் 28**

**விளக்கம்:**

1. அமெரிக்க டாலருக்கு நிகரான இந்தியா ரூபாயின் மதிப்பு ஜுன் 28 அன்று 69.10 ரூபாயாக வீழ்ச்சியடைந்தது. இதுவே இந்திய ரூபாயின் அதிகபட்ச வீழ்ச்சியாகும்.

2. இதற்கு முன் 2016 நவம்பர் 24 அன்று இந்திய ரூபாயின் மதிப்பு 68.73 ரூபாய் அளவுக்கு வீழ்ச்சியடைந்ததே அதிகபட்சமாக இருந்தது.

3. 2013-ல் இந்திய ரூபாயின் மதிப்பு 68 ஆக வீழ்ச்சியடைந்த போது அப்போதைய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் ராகுராம் ராஜன் "வெளிநாட்டு கரண்சி அந்நிய வங்கி திட்டம்" என்ற திட்டத்தை கொண்டு வந்தார்.

We Shine Academy TM